பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 13 திங்கட்கிழமை (29-07-2002) UTHAYAN - A Lively National Tamil Daily சுதிர் 246

# செப்ரெம்பரில் பாலசிங்கம் மீண்டும் வன்னி திரும்புவார்!

## கடல் மணற்திட்டில் தத்தளித்த 9 அகதிகள்!

மன்னார்,ஜூலை29

மன்னாக் கடலில் ஏழாவது மணற் திட்டில் தத்தளித்த ஒன்பது இலங்கை அகதிகளை மீனவர்கள் காப்பாற்றி கடற்படையிடம் ஒப்படைத்துள்ளனர்.

இராமேஸ்வரத்திலிருந்து கடந்த 23 ஆம் திகதி 52 ஆயிரம் ரூபா செலுத்தி தாம் இந்தியா வள்ளத்தில் பயணம் செய்ததாக அவர்கள் தெரிவித்தனர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரே குடும்பத்தினரான இவர்களைக் கடற்படையினர் பராமரித்து நேற்று மன்னார் நீதிமன்ற நீதிவான் எம்.பி. மொஹிதீன் முன்னிலையில் அவரது இல்லத்தில் ஆஜர் செய்தனர்.

கச்சேரியில் பெயர்களைப் பதிவு செய்து விட்டு சொந்த ஊருக்குச் செல்லுமாறு நீதிவான் அவர்களுக்கு பணிப்புரை விடுத்தார். (ஐ)

## உள்ளே...

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் இன்றைய உதயனுடன் வெளியாகின்றது.

வினாத்தாள்களின் மேலதிக பிரதிகளைப் பெற விரும்புபவர்கள் வினாத்தாள் ஒன்றுக்கு ஒரு ரூபா செலுத்தி 'உதயன்' பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

## புதிய புலனாய்வுப்பிரிவு

கொழும்பு,ஜூலை29

'கொழும்பு குற்றத் தடுப்பு புலனாய்வுப்பிரிவு' என்னும் பெயரில் பொலீஸ் விசாரணைப் பிரிவு ஒன்று எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் அமைக்கப்படவுள்ளது.

தற்போது செயலற்றிருக்கும் குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு இருந்த அனைத்து சட்ட அதிகாரங்களையும் கொண்டதாக இந்தப் புதிய பிரிவு செயற்படும். விசேடமாகக் குறிப்பிடக்கூடிய குற்றங்களை இந்தக் குழு விசாரணை செய்யும் என்று பிரதிப்பொலீஸ்மா அதிபர் போதி லியனகே தெரிவித்தார்.

பொலீஸ் அத்தியட்சகர் காமினி செனவிரட்ன தலைமையில் இந்தப் பொலீஸ் குழு இயங்கும். (ஐ)

## அரசு-புலிகள் பேச்சு அதன் பின்னர்தான்

வவுனியா,ஜூலை29

**விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் செப்ரெம்பர் மாத முற்பகுதியில் வன்னி திரும்புவார்.**

**அதன் பின்னரே இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அரசு - புலிகள் நேரடிப் பேச்சு இடம்பெறும் எனத் தெரியவருகின்றது.**

கடந்த தடவை கடல்விமானத்தில் பறந்துவந்து இரணைமடுக் குளத்தில் அன்ரன் பாலசிங்கமும் அவரது மனைவியும் இறங்கினர்.

இந்தத் தடவை அந்த வழியை அவர்கள் பயன்படுத்தமாட்டார்கள் என நம்பகமாக அறியவருகின்றது.

இம்முறை கட்டுநாயக்க விமான நிலையத்தையோ, இலங்கைத் துறை முகங்களைக்கூட அவர்கள் பயன் படுத்தமாட்டார்கள் என தெரிகின்றது.

(14.ஆம் பக்கம் பார்க்க)

## அழுகி உருக்குலைந்த நிலையில் மூன்று சடலங்கள் மீட்பு தட்சணாமருதமடுவில்!

வவுனியா,ஜூலை29

மன்னார் தட்சணாமருதமடுப் பகுதியில் இருந்து மூன்று சடலங்கள் விடுதலைப் புலிகளால் மீட்டெடுக்கப்பட்டன. கடந்த 26 ஆம் திகதி மீட்கப்பட்ட இச்சடலங்கள் உருக்குலைந்த நிலையில் காணப்பட்டன.

தட்சணாமருதமடு குளக்கரைக்கு அருகிலுள்ள புதர்ப்பகுதியிலிருந்து துர்மணம் வீசியதையடுத்து பொது மக்கள் அது குறித்து புலிகளிடம் முறையிட்டுள்ளனர். அதைத் தொடர்ந்து புலிகள் அங்கிருந்து மூன்று சடலங்களை மீட்டனர். உருக்குலைந்திருந்த சடலங்களின் கழுத்துகள் வெட்டப்பட்டிருந்தன.

மடு திருவிழாவிற்கு வந்த வியாபாரிகளாக இவர்கள் இருக்கலாம் என்று பொதுமக்கள் கருதுகின்றனர்.

விடுதலைப் புலிகளின் காவல் துறையினர் வவுனியாப் பொலீஸாருக்கு அறிவித்து, வவுனியா அரச அதிபர் மூலமாக அந்தச் சடலங்

(14ஆம் பக்கம் பார்க்க)

## வைகோ வீட்டில் சோதனையிட அனுமதி மறுப்பு!

மதுரை,ஜூலை29

'பொடா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வைகோவின் இல்லத்தில் சோதனை நடத்துவதற்கு பொலீஸாருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப்பேசினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் தற்போது சிறையில் இருக்கும் வைகோ மற்றும் எட்டுப் பேருக்கும் எதிராக வழக்குப்பதிவு செய்துள்ள 'கியூபிராஞ்ச்' பொலீஸார், அவர்களது வீடுகளில் சோதனையிட அனுமதிக்குமாறு திருமங்கலம் மஜிஸ்திரேட் வெங்கடாசலபதியிடம் கோரியிருந்தனர். (ஐ)

## போர் மூளும் என்று அஞ்சாதீர்கள் இனிமேல் மக்கள் போராட்டமே!

### மட்டு.மாவட்ட புலிகளின் துணைப் பொறுப்பாளர் விசு

மட்டக்களப்பு,ஜூலை29

எமது இனத்தின் விடுதலைக்கான போரை கல்விமான்களும் சாதாரண மக்களும் சேர்ந்தே நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. போர் இன்று மூளும், நாளை மூளும் என்று மக்கள் அஞ்சத்தேவையில்லை. போர் இனி இல்லை. மக்கள் போராட்டமே இனிமேல் நடைபெறும்.

1995 ஆம் ஆண்டில் மரணமான புலிகளின் கப்டனான அன்பரசியின் 7 ஆவது ஆண்டு நினைவு தினத்தையொட்டி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்ற கலைநிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மட்டக்களப்பு மாவட்ட புலிகளின் துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.விசு இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து அங்கு கூறியதாவது:-

அரசியல் புனிதமானது. அதன் மூலம் நாம் மக்களுக்கு சேவை செய்ய வேண்டும். ஆனால் அதன் மூலம் அதிகாரம் செலுத்தக்கூடாது என்று எமது தலைவர் அடிக்கடி

(14.ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றக் கூட்டத்தொடரை ஒத்திவைத்தால் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டு சபாநாயகர் மூலம் சபையைக் கூட்டுவோம்

### நாடாளுமன்ற விவகார அமைச்சர் அஸ்வர் எச்சரிக்கை

கொழும்பு,ஜூலை29

நாடாளுமன்றக் கூட்டத்தொடரை ஒத்திவைக்குமாறு பொ.ஐ.மு., ஜே.வி.பி, ம.ஐ.மு. ஆகியவை கோரிக்கை விடுத்திருக்கின்றன. இதற்கு அரசு இடமளிக்காது. அதை மீறி நாடாளுமன்றக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டால் நாடாளுமன்றத்தில் எமக்குள்ள பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டு சபாநாயகர் மூலம் நாடாளுமன்றத்தைக் கூட்டுவோம்.

நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் இவ்வாறு கூறினார். சபாநாயகர் மூலம் நாடாளுமன்றத்தைக் கூட்ட அரசமைப்புச் சட்டத்தில் இடமுண்டு என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

நாட்டின் பொருளாதாரம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் பல சட்டங்கள் திருத்தியமைக்கப்படஉள்ளன.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாக வாக்களித்தல், ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரங்களைக் குறைத்

(14ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



நிலையற்ற கல்வி நிர்வாகத்தில உலக சாதனை என்டு சொல்லுங்கோ......

## மரங்களையும் கால்நடைகளையும் கட்டுப்பாடின்றி அழிக்காதீர்கள்!

### புலிகளின் அரசியல்துறை வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜூலை29

மரங்களைக் கண்டபடி அழிப்பதும் மணல் மற்றும் மண் அகழ்தல், கால்நடைகளை கட்டுப்பாடின்றிக் கொல்வது ஆகிய செயல்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் பொதுமக்களைக் கேட்டிருக்கின்றனர்.

தேசமும் வளங்களும் எங்கள் சொத்துக்கள் என்ற தலைப்பில் யாழ். மாவட்ட அரசியல் துறையினர் நேற்று விடுத்த ஓர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இயற்கை நமக்களித்த கொடையினை குறுகிய நோக்கத்தினை மட்டுமே கொண்டு எந்தவிதமான தூர நோக்குமின்றி அழிப்பது வேதனைக்குரிய விடயமாகும். எம் தேசத்துக்கும் எதிர்கால சந்ததிக்கும் செய்யும்

(2ஆம் பக்கம் பார்க்க)

## வலயங்கள், கோட்டங்களுக்குப் பதில் நாட்டில் 200 கல்வி வலயங்கள்?

### நிர்வாகமுறை மாற்றத்துக்கு அமைச்சர் திட்டம்

காரைதீவு,ஜூலை29

இலங்கையின் கல்வி நிர்வாகக் கட்டமைப்பில் விரைவில் மாற்றங்கள் செய்யப்படும். தற்போதுள்ள வலயங்கள், கோட்டங்கள் என்பவற்றுக்குப் பதிலாக 200 கல்வி வலயங்கள் உருவாக்கப்படும். ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுக்கும் ஒவ்வொரு கல்வி வலயம் உருவாக்கப்படும்.

இவ்வாறு கல்வியமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் கூறியுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் தமிழ்மொழி மூல மாணவர்களின் கல்வி நிர்வாகம், மேற்பார்வை ஆகியவற்றுக்கு தமிழ்மொழி மூல அதிகாரிகள் இல்லை. எனவே, புதிய முறைமுறையில் எந்தவகையான பாரபட்சமும் காட்டப்படக்கூடாது என

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# விளையாட்டு

## 14 வயதுக்குட்பட்டோர் உதைபந்தாட்டம்:

## மன்னார் சென். சேவியர் அணி வெற்றியீட்டி சம்பியனாகத் தெரிவு

வலி.வடக்கு,ஜுலை29

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஆதரவில் வடக்கு - கிழக்கு பாடசாலை அணிகளிடையேயான 14 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் மன்னார் சென். சேவியர் அணி இவ்வாண்டுக்கானசம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

நேற்றுப் பி.ப. 5.20 மணி முதல் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இப்போட்டி இடம்பெற்றது.

திருகோணமலை சென்.ஜோசப் கல்லூரிக்கும் மன்னார் சென்.சேவியர் கல்லூரிக்கும் இடையே இடம்பெற்ற இறுதிப்போட்டியில் முதல்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் எந்தவொரு கோல்களையும் போடவில்லை.

மன்னார் சென்.சேவியர் கல்லூரி அணிக்குப் பல சந்தர்ப்பங்கள் கிடைத்த போதிலும் அவற்றைக் கோல்களாக்க அந்த அணி தவறியது. பிற்பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் மிகவும் விறுவிறுப்பாக விளையாடின. ஆட்டம் முடிவடைவதற்கு 3 நிமிடங்கள் இருக்கும்போது சென்.சேவியர் கல்லூரி இடதுபக்க பின்வீரர் (Left in) கே.மகிந்தன் தனக்குக் கிடைத்த பந்தை இலகுவாக கோல்கம்பத்தை நோக்கிச் செலுத்தி ஒருகோலைப் போட்டார். அதனால் ஆட்டத்தில் 1-0 என்ற கோல் கணக்கில் மன்னார் சென்.சேவியர் அணி வெற்றியீட்டியது.

நேற்றைய இறுதிப்போட்டி நிகழ்வுக்கு யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் கிளிபேட் அன்ரனிப்பிள்ளை தலைமைவகித்தார்.

பிரதம விருந்தினராக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உபதலைவர் எஸ்.என்.ஆனந்தராசாவும் சிறப்பு விருந்தினராக யாழ்.மாநகர முதல்வர் செ.கந்தையனும் கலந்துகொண்டனர்.

இறுதிப்போட்டியில் கலந்துகொண்ட 13 பாடசாலை அணிகளுக்கும் பந்துகள் அடங்கிய பொதிகள் அன்பளிப்பாக வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

போட்டித் தொடரின் சிறந்த வீரனாக மன்னார் சென்.சேவியர் கல்லூரி வீரன் கே.மகிந்தனும் -

போட்டித் தொடரின் சிறந்த கோல் காப்பாளனாக திருகோணமலை சென். ஜோசெப் கல்லூரி வீரன் எல்.பிரசாத்தும் போட்டித்தொடரில் கூடியகோல்களைப் போட்ட வீரனாக திருகோணமலை சென்.ஜோசெப் கல்லூரியைச் சேர்ந்த கே.பிரதீப்பும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இப்போட்டியில் கலந்துகொண்ட பாடசாலைகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட ஐந்து பாடசாலைச் சேர்ந்த மாணவர்களுக்கு விசேட பரிசில்கள் வழங்கப்பட்டன.

அம்பாறை சம்ஸ் மத்திய கல்லூரி வீரர்களான ஏ.ஆர்.எம்.ஹஸன், எம்.எல்.மொஹமட் நமீல், மட்டக்களப்பு இக்னேஷியஸ் கல்லூரியைச் சேர்ந்த டொன்சன், ஜோன்சன், மட்டக்களப்பு சென்.மைக்கல் கல்லூரியைச் சேர்ந்த வெஸ்ரர் பாத்லொட், மன்னார் சென். லூசியஸ் கல்லூரியைச் சேர்ந்த பி. கனஸ்ரீன், எல்.அமலநாதன், வடமராட்சி தேவரையாளி இந்துக் கல்லூரியைச் சேர்ந்த பி.நடராஜன், எம்.நடராசா ஆகியோரே விசேட பரிசு பெற்றனர்.

அல்வாய் வடக்கு ஆர்.சி.ரி.எம். பாடசாலையைச் சேர்ந்த அணியின் வீரனான ரி.திலீபன் என்பவருக்கு விசேட பரிசு வழங்கப்பட்டது. இவர் வலது கையை தோள்மூட்டுடன் இழந்தவர் ஆவர். (ஐ-86)

## இன்றைய ஆட்டம்

வலி.வடக்கு,ஜுலை29

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் 13 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

☆ சென்.ஜோன்ஸ் கல்லூரி எதிர் அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம். (சென்.ஜோன்ஸ் மைதானம்)

☆ வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி (யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம்)

☆ யாழ். இந்துக் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி (யாழ். இந்துக் கல்லூரிமைதானம்)

☆ கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி (கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம்) (ஐ-86)

## நூலிழையில் நழுவியது சுசந்திகாவின் பதக்கம்

17 ஆவது பொதுநலவாய விளையாட்டு விழாவில் பெண்கள் 100 மீற்றர் ஓட்டத்தில் இலங்கை பதக்கம் பெறும்வாய்ப்பு நூலிழையில் நழுவியது. இறுதிப்போட்டியில் இலங்கை வீராங்கனை சுசந்திகா 4ஆவது இடம்பெற்றார். இத்தூரத்தை 11.08 செக்கன்களில் ஓடினார் சுசந்திகா. பஹமஸ் வீராங்கனை செவாதெடா பைன்ஸ் 11.07 செக்கன்களில் ஓடி வெண்கலப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார்.

மற்றொரு பஹமஸ் வீராங்கனை டெபி பேர்குஷன் 10.91 செக்கன்களில் ஓடித் தங்கப் பதக்கத்தையும், ஜமைக்கா வீராங்கனை வெரோனிக்கா கம்பெல் 11.00 செக்கன்களில் இரண்டாமிடத்தையும் பெற்றனர்.

ஆண்கள் 400 மீற்றர் பிரிவில் இலங்கை வீரர் சுகத் திலகரத்ன இறுதிப்போட்டிக்குத் தகுதிபெறத் தவறினார். அரையிறுதியில் அவர் 45.79 செக்கன்களில் ஓடி ஆறாவது இடத்தைப் பெற்றார்.

மற்றோர் இலங்கை வீரரான ரொஹான் பிரதீப்குமார் 400 மீற்றர் ஓட்டத்தில் இரண்டாம் சுற்றுடன் வெறியேறினார். இரண்டாம் சுற்றில் குழு ஒன்றில் ஓடிய அவர் 7 வீரர்களில் 6 ஆம் இடத்தைப் பெற்றார். இத்தூரத்தை 47.14 செக்கன்களில் ரொஹான் ஓடிமுடித்தார். (ஐ)

## ஒழுக்காற்று விசாரணைக்கு முரளிதரனுக்கு அழைப்பு

இலங்கைக் கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனை விசாரணையொன்றுக்கு வருமாறு இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை பணித்துள்ளது.

அண்மையில் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் முரளிதரன் சர்ச்சைக்குரிய கருத்துக்களைத் தெரிவித்தமையே இதற்குக் காரணம்.

கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையில் அரசியல்வாதிகள், வர்த்தகர்கள் ஆகியோரின் செயற்பாடுகள் மற்றும் உள்ளூர் கிரிக்கெட் போட்டி ஒழுங்குமுறை ஆகியவற்றை முரளி விமர்சித்தார்.

இதையடுத்து நாளை செவ்வாய்க்கிழமை கிரிக்கெட் சபையின் இடைக்கால நிர்வாகக் குழுவின் முன் ஆஜராகுமாறு அழைக்கப்பட்டுள்ளார். இவ்வாறு தம்மை இனம் காட்ட விரும்பாத கிரிக்கெட் சபை அதிகாரி ஒருவர் செய்தி நிறுவனமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

"கடந்த வெள்ளியன்று மாலை 5 மணிக்கு இவ்விசாரணையை நடத்த இருந்தோம். எனினும் தனிப்பட்ட நிகழ்ச்சியொன்றில் கலந்துகொள்ள வேண்டியுள்ளது என முரளி தெரிவித்தார். இதனால் செவ்வாய்க்கிழமைக்கு இவ்விசாரணையை ஒத்திவைத்தோம். இவ்வாறு விசாரணைக்குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி அநுரதென்னகோனின் சம்மதத்துடனேயே மேற்படி தொலைக்காட்சி நிகழ்ச்சியில் முரளி பங்குபற்றினார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தனக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து இந்நிகழ்ச்சியில் பேசப்போவதாக முரளி தெரிவித்தாராம். (ஐ)

# தென்மராட்சி அழிவுகளை ஆப்கானுடன் ஒப்பிடுகின்றார் உலக வங்கி அதிகாரி

தென்மராட்சி,ஜுலை29

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த உலக வங்கி அதிகாரிகள் குழு போரினால் அழிவுண்ட தென்மராட்சிப் பிரதேசத்தை நேற்றுமுன்தினம் பார்வையிட்டது.

தென்மராட்சி அழிவுகளைப் பார்க்கும்போது அந்தப் பிரதேசம் போரில் அழிவுண்ட ஆப்கானிஸ்தான் போலக் காட்சியளிப்பதாக உலக வங்கி அதிகாரி ஒருவர் ஆதங்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் அதிகாலையில் வவுனியாவில் இருந்து ஏ-9 பாதையூடாக தென்மராட்சி பிரதேச செயலகம் வந்துசேர்ந்த மூவர் கொண்ட உலக வங்கி அதிகாரிகள் குழு யாழ்மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம், திட்டப் பணிப்பாளர் பாலகிருஷ்ணன், தென்மராட்சி பிரதேச செயலர் ஸ்ரீநிவாசன், பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் தி. யோகானந்தம் சகிதம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி, சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை ஆகியவற்றைப் பார்வையிட்டனர்.

கல்வயல் பகுதிக்கு விஜயம் செய்த இக்குழுவினர், இப்பகுதியினை சுற்றி பார்வையிட்டதுடன் கல்வயல் கிராம உத்தியோகத்தர் க.வாமதேவனால் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த பொதுமக்கள் சந்திப்பிலும் கலந்துகொண்டனர். நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தில் மக்கள் தமது கஷடங்களையும், தேவைகளையும் எடுத்துக் கூறினர். மிகவும் ஆவலுடன் மக்களின் குறைகளைக் கேட்டறிந்த அதிகாரிகள் குழுவினர், நிரந்தர சமாதானம் ஏற்படும் பட்சத்தில் 3 அல்லது 4 மாதங்களுக்கிடையில் மக்களது தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் தமது வேலைத்திட்டங்களை ஆரம்பிப்பதாக உறுதிகூறினர். (ஐ)

# மட்டக்களப்பு மாவட்டத்தில் படையினர் 8 பாடசாலைகளிலிருந்து வெளியேற்றம்

காத்தான்குடி,ஜுலை29

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 8 பாடசாலைகளில் நிலைகொண்டிருந்த படையினர் வெளியேறிவிட்டனர் என்று மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ரி.பொன்னம்பலம் தெரிவித்தார்.

காயங்கேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, கிண்ணையடி சரஸ்வதி வித்தியாலயம், பிள்ளையாரடி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, களுவாஞ்சிக்குடி விநாயகர் வித்தியாலயம், பெரியகல்லாறு பாடசாலை, மண்டூர் 13 விக்னேஸ்வரா வித்தியாலயம், வாகரை வித்தியாலயம், முறக்கொட்டாஞ்சேனை இராமகிருஷ்ண வித்தியாலயம் ஆகியவற்றிலிருந்தே படையினர் வெளியேறியுள்ளனர். ஏனைய பாடசாலைகளில் நிலைகொண்டிருந்த படையினர் ஏற்கனவே வெளியேறியது தெரிந்ததே.

புரிந்துணர்வு ஒப்பந்தப்படி எதிர்வரும் 2 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலைகள், ஆலயங்களிலிருந்து படையினர் வெளியேற வேண்டும்.(ஐ)

## உலகவங்கிக்குழு யாழ்.ஆஸ்பத்திரிக்கு நேற்று விஜயம்

யாழ்ப்பாணம்,ஜுலை29

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அவசர வேலைத்திட்டங்களை மேற்கொள்வதற்கு 30 மில்லியன் அமெரிக்க டொலர்களை உலகவங்கி ஒதுக்கியுள்ளது.

- இவ்வாறு நேற்றுக்காலை யாழ். போதனாவைத்தியசாலைக்கு விஜயம் செய்த உலகவங்கியின் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் வைத்தியசாலைக்கு வருகை தந்த பிரதிநிதிகள், வைத்தியசாலைக்கு உடனடியாகத் தேவைப்படுகின்ற விடயங்கள் குறித்து அங்குள்ள அதிகாரிகளிடம் கேட்டறிந்து கொண்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தனர். இந்த நிதியின் மூலம் வடக்கு-கிழக்கில் உடனடியாக மேற்கொள்ள வேண்டிய தேவைகளையே நிறைவேற்ற முடியும் எனத் தெரிவித்த குழுவினர் வைத்தியசாலையின் விடுதிகளையும் பார்வையிட்டனர்.

வைத்தியசாலைக்கு சி.ரி.ஸ்கானர் முற்றும் கட்டில்கள், மெத்தைகள் போன்றன தேவைப்படுவதாகவும்-

புதிய கட்டடங்கள் அமைக்க வேண்டியுள்ளதாகவும்-

வைத்தியசாலை அதிகாரிகளால் குழுவினரிடம் தெரிவிக்கப்பட்டது. (ஒ-10)

## சுகாதார நலனோம்பு அமைச்சின் அதிகாரிகள்குழு யாழ்.வருகை

யாழ்.குடாநாட்டில் உள்ள வைத்தியசாலைகளின அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நிமித்தம், அவற்றைப் பார்வையிட்டு குறைபாடுகளைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த சுகாதார அமைச்சின் செயலாளரின் தலைமையிலான குழுவினர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கும் வருகைதந்தனர்.

நண்பகல் விமானம்மூலம் பலாலி விமானநிலையம் வந்தடைந்த இக்குழுவை, யாழ்.போதனாவைத்தியசாலைப் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் யாழ்.மாவட்ட சுகாதாரசேவைகள் பிரிவு உயர் அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று வரவேற்று அங்கிருந்து வைத்தியசாலைக்கு வாகனங்களில் அழைத்து வந்தது.

மேற்படி குழுவினர் வைத்தியசாலையின் வைத்தியநிபுணர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் மட்டத்திலான கலந்துரையாடல் ஒன்றிலும் கலந்துகொண்டனர்.

வைத்தியசாலையின் குறைபாடுகள் பற்றியும், மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திகள் தொடர்பாகவும் இதில் கலந்துரையாடப்பட்டது.(எ-15)

## மாமாங்கேஸ்வர ஆலய முன்றில் பொலீஸ் சாவடி இன்று அகலும்

மட்டக்களப்பு,ஜுலை29

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வர ஆலய முன்றிலில் அமைந்துள்ள பொலஸ் சாவடி இன்று நள்ளிரவுக்கு முன் அகற்றப்படவுள்ளது. அத்துடன், ஜெயந்திபுரம் பாதையும் மக்களின் போக்குவரத்துக்காக நாளை திறந்து விடப்படவுள்ளது.

மட்டக்களப்பு பொலஸார் இவற்றைத் தெரிவித்தனர். நாவற்குடா பிள்ளையார் ஆலய முன்றிலில் அமைந்துள்ள பொலஸ் சாவடியும் அகற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய இவை அகற்றப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.(ஐ)

## மரங்களையும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அநீதியுமாகும். எமது சுற்றுச்சூழலையும் நிலத்தையும் பாதுகாக்கின்ற தாவரங்களை அழிப்பதும் நிலத்தை அகழ்ந்து மண் ஏற்றுதலும் கால்நடைகளை எந்தவித நடைமுறைப் பரிசோதனைக்குட்படுத்தாமல் உணவுக்காகக் கொல்வதும் இவற்றுள் அடங்கும்.

பனை, தென்னை, வேம்பு, மா, பலா போன்ற பயன்மிகு மரங்களை வரைமுறையற்று அழிப்பது நிறுத்தப்படவேண்டியது அவசியமாகும்.

பணம் ஒன்றையே நோக்கமாகக் கொண்டு மணல் மற்றும் மண் ஏற்றுதலால் காலப்போக்கில் கடல் நீர் உட்புகுந்து நன்னீர் உவர்நீராக மாறும் என்பதால் இவைகள் உடன் நிறுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

யுத்தம் ஓய்ந்துள்ள இக்காலபகுதியில் அனைவரும் இணைந்து ஆக்கபூர்வமாகச் செயற்படுதல் அவசியமாகும். மரங்களை அழிப்பதும் மண் அகழ்வதும் உடன் நிறுத்தப்படுவதோடு உணவுத் தேவைக்காக எந்தவித கட்டுப்பாடுகளுமின்றி கால்நடைகள் கொல்லப்படுவது நிறுத்தப்படவேண்டியது அவசியமாகும்.

மேற்படி அழிப்பு நடவடிக்கைகளானது மக்களின் நலனுக்கும் தாயக தேசத்துக்கும் குந்தகம் விளைவிக்கும் செயற்பாடுகளாகவே அமையும்.

மேற்கூறப்பட்டவைகள் மிகவும் கட்டுப்பாடற்ற முறையில் தீவகப் பிரதேசத்தில் நிகழ்கின்றன. இவை உடன் நிறுத்தப்படவேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## அமைச்சர் ரவியின் பதவியைப் பறிக்கும் முயற்சியை ஜனாதிபதி கைவிடவில்லை

வர்த்தக, நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவின் அமைச்சர் பதவியைப் பறிக்கும் முயற்சியை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இன்னமும் கைவிடவில்லை எனத் தெரிகிறது.

அமைச்சரவையிலிருந்து கருணாநாயக்க வெளியேற்றப்படவேண்டும் என்ற கருத்தை ஏற்கனவே பிரதமரிடம் வெளியிட்டிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா, அமைச்சர் கருணாநாயக்கா பிரச்சினையைப் பிரதமரிடம் மீண்டும் எழுப்பவிருக்கிறார்.

அமைச்சரவைக்கு ஜனாதிபதி எடுத்துவந்த கைப்பையை அமைச்சர் கருணாநாயக்க ஒரு விவகாரமாக்கியதை அடுத்து ஜனாதிபதி - அமைச்சர் கருணாநாயக்க மோதல் ஏற்பட்டிருப்பது தெரிந்ததே.

பிரதமர் ரணில் அமெரிக்காவுக்குப் புறப்படுவதற்கு முன் அவருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிய ஜனாதிபதி, அமைச்சர் கருணாநாயக்க பதவியிலிருந்து அகற்றப்படுவது தொடர்பாகப் பிரதமரின் கருத்தைக் கோரியிருந்தார். கருணாநாயக்க அமைச்சரவையில் இருந்து அகற்றப்படுவதற்கு தான் காரணம் எதனையும் காணவில்லை என்று பிரதமர் அப்பொழுது பதிலளித்திருந்தார்.

ஆனால், கருணாநாயக்காவை அகற்றவேண்டும் என்ற தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி மீண்டும் வலியுறுத்துவார் என்று ஜனாதிபதி செயலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

இதற்கிடையே, வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய அமைச்சர் கருணாநாயக்கா, பிரதமரும் இந்நாட்டு மக்களும் மட்டுமே தன்னைப் பதவியில் இருந்து அகற்றமுடியும் என்று கூறியிருக்கிறார். (ஐ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜுலை29

வலி.கிழக்கு கோட்டத்துக்கு உட்பட்ட அனைத்துத் தனியார் கல்வி நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று மாலை 5மணிக்கு கொக்குவில், பொற்பதிவீதியில் உள்ள மாவட்ட அரசியல்துறை பணிமனையில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

☆ ☆ ☆

நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய கோட்டத்துக்கு உட்பட்ட பொது அமைப்புக்கள், நிறுவனங்களின் உறுப்பினர்களுடனான முக்கிய சந்திப்பு ஒன்று இன்று மாலை 4மணிக்கு, கொக்குவில் நாமகள் வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது.

சகல பொது அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்களின் பிரதிநிதிகளை இந்தச் சந்திப்பில் தவறாது கலந்துகொள்ளுமாறு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் அறிவித்துள்ளது.(எ)



உக்ரைனில் சகாச நிகழ்வில் ஈடுபட்ட போர் விமானம் தரையை நோக்கி வருவதையும்... தரையில் மோதுவதையும்... வெடித்துச் சிதறுவதையும் முறையே முதல் மூன்று படங்களில் காணலாம். விபத்தில் காயமடைந்த சிறுவன் ஒருவனும் நபர் ஒருவரும் கடைசிப் படத்தில் உள்ளனர்.

# உக்ரைன் நாட்டில் சாகச நிகழ்வில் வேடிக்கை காட்டிய விமானம் மக்கள் கூட்டத்துக்குள் வீழ்ந்தது!

## விமானிகள் இருவரும் தப்பினர்; குழந்தைகள் உட்பட 83பேர் பலி!!

லண்டன்,ஜூலை29

**உக்ரைன் நாட்டில் சாகச நிகழ்வொன்றில் வேடிக்கை காட்டிய விமானம் கட்டுப்பாடு இழந்து பார்வையாளர்கள் மத்தியில் வீழ்ந்து நொறுங்கியது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அந்த விமானத்தின் விமானிகள் இருவரும் 'பரசூட்' மூலம் வெளியே குதித்துத் தப்பிவிட்டனர். ஆனால், விமானம் விழ்ந்த இடத்திலிருந்த குழந்தைகள் உட்பட 83 பேர் உயிரிழந்தனர்.**

உக்ரைன் விமானப் படையின் 60ஆவது ஆண்டு நிறைவு விழாவை யொட்டி நேற்றுமுன்தினம் சனிக் கிழமை ஸ்கிலிலிவ் விமானத்தளத் தில் விமானங்களின் சாகச நிகழ்ச்சி நடந்தது. இதை ஆயிரக்கணக்கான மக்கள் பார்த்து ரசித்துக் கொண்டு இருந்தனர்.

எஸ்.-27 ரக ஜெட் போர் விமா னம் ஒன்று வானில் குட்டிக்கரணம் அடித்து சாகச நிகழ்ச்சிகளைச் செய்து காட்டியது. 2விமானிகள் அந்த விமா னத்தை ஓட்டினார்கள். திடீரென்று அந்த விமானம் கட்டுப்பாட்டை இழந் ததால் விமானிகள் இருவரும் வெளியே குதித்து உயிர்தப்பினார்கள்.

ஆனால், பார்வையாளர்கள் மத்தியில் விமானம் வீழ்ந்து விட்ட தால் மிகப்பெரிய சேதத்தை உரு வாக்கிவிட்டது. தரையில் வீழ்ந்த விமானம் வெடித்து தீப்பிளம்பாகச் சிதறியது. அதன் சிதறல்கள் அங்கு கூடியிருந்தவர்கள் மீது வீழ்ந்ததால் 83பேர் வரை பலியாகிவிட்டனர்; 116 பேர் காயம் அடைந்துவிட்டனர். விபத் தில் இறந்தவர்கள் பெரும்பாலும் குழந்தைகள் என்று தெரியவந்துள் ளது. காயம் அடைந்தவர்களை ஆஸ பத்திரிக்குக் கொண்டுசெல்ல 20அம் புலன்ஸ்கள் பயன்படுத்தப்பட்டன. ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ள பலர் உயிருக்குப் போராடிக் கொணடு இருக்கிறார்கள். உடல் பாகங்கள் சிதறிக் கிடப்பதால் இறந்தவர்களின் சரியான எண்ணிக்கையை கணக் கிட முடியவில்லை.

விபத்தில் சிக்கி காயம் அடைந்த சினோவி என்பவர் கூறுகையில் -

"விமானம் தரையை நோக்கி வேக மாக வந்ததும் என்னால் ஒன்றும் செய்யமுடியவில்லை. குழந்தை களை இறுக்கமாகப் பிடித்துக் கொண் டேன். சிறிதுநேரத்தில் நாங்கள் தூரத்தில் வீசப்பட்டுக் கிடந்தோம். துண்டிக்கப்பட்ட கைகளும் கால் களும் மற்றும் உடல் பாகங்களும் என் அருகில் சிதறிக்கிடந்தன. நான் அப்படியே ஸ்தம்பித்துப் போனேன்" என்று தெரிவித்தார். விபத்து பற்றி அறிந்ததும் உக்ரைன் அதிபர் லியோ னிட் குச்மா தனது விடுமுறை காலப் பயணத்தை ரத்துசெய்து விட்டு உட னடியாக லிவிவ் திரும்பினார்.

இந்தக் கோர விபத்துக் காரண மாக, உக்ரைன் விமானப் படைத் தளபதியையும், சாகச நிகழ்வில் பங்கேற்ற விமானப் படை அணியின் கட்டளை அதிகாரியையும் அதிபர் குச்மா பதவி விலக்கியுள்ளார். (ஒ)



உக்ரைனில் விபத்துக்குள்ளான விமானத்தில் இருந்து கடைசி விநாடியில் குதித்து உயிர் தப்பிய விமானிகள் இருவரையும் அதிகாரி கள் இருவர் அழைத்துவரும் காட்சி.

## ஆஸ்திரியாவில் குண்டு வெடிப்பு: 20பேர் காயம்!

லின்ஸ்,ஜூலை29

ஆஸ்திரியா நாட்டின் மேற்குப் பகுதியில் உள்ள பிலின்ஸ்பீ நகர மண்டபத்தில் 'டிஸ்கோ' நடன நிகழச்சி நடந்துகொண்டு இருந்தது. அப்போது மண்டபத்தில் குண்டு வெடித்தது. இதில் 20 பேர் காயமடைந்தனர். அனை வரும் இளைஞர்கள். மண்டபத்தில் ஒரு கைஎறி குண்டின் சிதைவுகள் கண்டெடுக்கப்பட்டன. (ஒ)

## அமெரிக்கப் படைமீது ஆப்கானில் தாக்குதல்

காபூல்,ஜூலை29

ஆப்கானிஸ்தானில் தலிபான் அல்லது அல்கெய்டாவின் என நம்பப் படும் குழுவினர் நடத்திய தாக்குத லில் 4அமெரிக்க இராணுவத்தின் காய மடைந்தனர். அவர்களுடன் பாதுகாப் புப் பணியில் இணைந்து செயற் பட்ட ஆப்கான் படை யைச் சேர்ந்த இரு சிப்பாய்கள் உயி ரிழந்தனர்.

தென்கிழக்குப் பிரதேச நகரான கோஸ்ட்டில் இருந்து கிழக்கே 12 கிலோமீற்றர் கள் தொலைவில் நேற்று இச்சம்ப வம் இடம்பெற்றது.



காயமடைந்த அமெரிக்க வீரரை ஹெலியில் ஏற்றும் காட்சி.

அமெரிக்கா - ஆப்கான் கூட்டுப் படையினர் அடங்கிய குழு ஒன்று தலிபான், அல்கெய்டா போராளிக ளைத் தேடும்பணியில் ஈடுபட்டிருந்த தாகவும்-

கைவிடப்பட்டிருந்த பழைய கட் டடம் ஒன்றுக்குள் மறைந்திருந்த சிலர் அப்போது துப்பாக்கியால் சுட்டுத் தாக் குதல் நடத்தியதாகவும்- கூறப்படுகிறது.

பாக்கிஸ்தானிய எல்லை அருகே உள்ள கோஸ்ட் நகரப்பகுதியில் இத்தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது ஆப்கானில் அமெரிக்கப்படையினர் எதிர்நோக்கும் நெருக்கடியை உணர்த்து வதாகக் கருதப்படுகிறது.

கடந்த ஒக்ரோபரில் ஆப்கானிஸ் தானில் அமெரிக்கா தொடங்கிய இரா ணுவ நடவடிக்கையில் இதுவரை 40 அமெரிக்கவீரர்கள் உயிரிழந்துள்ளா ன். மேலும் 360 வீரர்கள் காயமடைந் துள்ளனர். (ஒ)

## பெண்ணை நிர்வாணமாக்கி இந்தியாவில் ஊர்வலம்

அமிருதசரஸ்,ஜூலை29

இந்தியாவின் பஞ்சாப்பில் 35வய துப் பெண் நிர்வாணமாக்கப்பட்டு தெருவில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

அமிர்தசரஸ் நகரில் துபேர்ஜி பஜாரில் கடந்த வியாழக்கிழமை காலை இச்சம்பவம் நடந்தது.

அதே பகுதியைச் சேர்ந்த ஒரு குடும்பத்தில் உள்ள வேறொரு பெண ஒழுக்கம் கெட்டு தவறான பாதை யில் செல்வதாக இப்பெண் பொய் வதந்தியைப் பரப்பியுள்ளார். இதை யடுத்து ஆத்திரமுற்ற அக் குடும்பத் தின் மற்ற 3 பெண்கள் இந்த பெண் ணின் வீட்டுக்குச் சென்று உதைத் துள்ளனர். பிறகு ஆடையைக் களைந்து, நிர்வாணமாக்கி, முகத் தில் கரியைப் பூசி தெருவில் ஊர்வல மாக இழுத்துச் சென்றனர். அந்த மூன்று பெண்களையும் பொலீஸார் கைது செய்துள்ளனர். (ஒ)

## இந்திய ஜனாதிபதியைக் கொல்லும் தீவிரவாதிகளின் திட்டம் தோல்வி!

புதுடில்லி,ஜூலை29

இந்திய ஜனாதிபதி அப்துல் கலா மைக் கொல்லவும், கிரிக்கெட் பிரபலங் களான சச்சின் டெண்டுல்கர், சௌரவ் கங்குலி ஆகியோரைக் கடத்தவும் தீவிரவாதிகள் திட்டமிட்டிருந்தமை தெரியவந்துள்ளதாக இந்தியப் புல னாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ள னர்.

காஷ்மீர் தீவிரவாத இயக்கமான ஹர்கத் உல் ஜிகாத் -இ-இஸ்லாமி இயக்கத்தைச் சேர்ந்த 7 தீவிரவாதி களைத் தாம் கைதுசெய்ததாகவும் -

அவர்களில் நயீம் என்ற தீவிரவாதி அளித்த வாக்குமூலத்திலேயே இந்தத் தகவல்கள் தெரியவந்ததாகவும் -

புலனாய்வு அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

நயீமின் வாக்குமூலத்தை குற்றப பத்திரிகையுடன் இணைத்து நீதி மன றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

அந்த வாக்குமூலத்தில், "அப்துல் கலாம் கடந்த பெப்ரவரி மாதம் பீகார் மாநிலம் பாட்னாவுக்கு வந்த போது அவரைக் கொலை செய்யத் திட்டம் போட்டோம். ஆனால், போதிய உதவிகள் கிடைக்காததால் அந்தத் திட்டம் நிறைவேறாமல் போய்விட்டது. கிரிக்கெட் வீரர்கள் டெண்டுல்கர், கங் குலி ஆகியோரைக் கடத்தவும் திட் டம் தீட்டினோம். திகார் ஜெயிலில் இருக்கும் எங்கள் கூட்டாளி முஹம்மது கம்ரான் என்ற முஹம்மது அமீர்கானை விடுவிப்பதற்காக இந்தத் திட்டத்தைத் தீட்டினோம். ஆனால், கிரிக்கெட் வீரர் களுக்கு தீவிரவாதிகளால் ஆபத்து ஏற்படலாம் என்று புலனாய்வுத் துறை யினர் ஏற்கனவே எச்சரித்து இருந்த னர். அதனால் அவர்களுக்குப் பாது காப்பு தீவிரப்படுத்தப்பட்டு இருந்தது. இதனால் அவர்களைக் கடத்தும் முயற்சியும் வெற்றி பெறாமல் போய் விட்டது"

என்று நயீம் தெரிவித்துள்ளதாகக் கூறப்பட்டது. (ஒ)

## அமெரிக்க அதிபர் புஷ் 25நாள்கள் ஓய்வில்

வாஷிங்ரன்,ஜூலை29

அமெரிக்க அதிபர் புஷ் வேலைப் பளு நெருக்கடிகளுக்கு இடையில் ஓய்வு எடுக்கப்போகிறார். டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள அவருக்குச் சொந்தமான காட்டில் 25 நாள்கள் தங்கி ஓய்வு எடுப்பார். இந்தத் தக வலை வெள்ளை மாளிகை அதி காரி ஒருவர் தெரிவித்தார்.

ஒகஸ்ட் 6ஆம் திகதி வாஷிங்ர னில் இருந்து புறப்படும் புஷ், செப் ரெம்பர் 2ஆம் திகதிதான் மீண்டும் பணிக்குத் திரும்புவார்.

ஓய்வு எடுக்கும் நாள்களில் ஏறத் தாழ 12 நகரங்களுக்குச் சென்று நிகழ்ச்சிகளில் புஷ் கலந்துகொள்வார்.

வாஷிங்ரனில் இருந்து புறப்படும் முன்னர் குடும்பத்தினருடன் மெயின் மாகாணத்துக்குச் சென்று சில நாள் களை அவர் கழிக்கவுள்ளார். (ஒ)

## ஜெயலலிதாவின் கருத்துக்கு கருணாநிதி ஆதரவு

சென்னை,ஜூலை29

குடியரசுத் தலைவர், பிரதமர் பதவியேற்பு விழாக்களில் மாநில முதல்வர்களை அலட்சியப்படுத்தக் கூடாது; இதுவரை இருந்துவந்த முறையை மாற்றி இரு விழாக்களுக் கும் அனைத்து முதல்வர்களுக்கும் மத்திய அரசு அழைப்பிதழ் அனுப்ப வேண்டும்' என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி நேற்று முன்தினம் தெரி வித்தார்.

இந்திய ஜனாதிபதியாக அப்துல் கலாம் பதவியேற்ற நிகழ்ச்சிக்குத் தனக்கு அழைப்பிதழ் அனுப்பப்பட வில்லை என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா மத்திய அரசின் மீது குறை கூறியிருப்பது தொடர்பாகவே கருணாநிதி இந்தக் கருத்தை வெளி யிட்டார்.

இதன்மூலம் முதற்றடவையாக ஜெயலலிதாவின் கருத்தை அவர் ஆதரித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாகக் கரு ணாநிதி மேலும் கூறுகையில்:-

இதுவரை இருந்துவந்துள்ள பழக் கத்தை இனிமேலாவது மாற்றி, மாநில முதல்வர்களிடம் விண்ணப்பத்தை எதிர்பாராமல் குடியரசுத் தலைவர் பதவியேற்புக்கும் பிரதமர் பதவியேற் புக்கும் அழைப்பு அனுப்பும் பழக் கத்தை மத்திய அரசு ஏற்படுத்த வேண்டும் - என்றார்.

ஜெயலலிதாவின் கோரிக்கைக்கு முதன்முதலாக ஒத்துப்போயிருப்ப தற்கு என்ன காரணம் என்று செய்தி யாளர்கள் அவரிடம் கேட்டனர். அதற்கு, 'ஜெயலலிதாவின் கருத்து டன் நான் நெருங்கிப் போகிறேன் என்று அர்த்தமல்ல' மாநில சுயாட் சிக் கொள்கையில் இருந்து விலகா மல் உறுதியோடு இருக்கிறேன் என்று தான் அர்த்தம் - என்றார் கருணாநிதி.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

டோகாவில் இருந்து தருவிக்கப்பட்டது (டோகா SONY SHOW ROOM) MHC VX777 SONY ஒடியோ CD வீடியோ CD, கசற் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: உமாசுதன், ஆஸ்டி றோட், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். (6452)

Gold Fish பெரியது, சிறியது, ஏஞ்சல் குறா, Redcap மீன்கள் விற்பனைக்கு உண்டு தொடர்பு: S.விஜயன, 35/1, இந்துக் கல்லூரி அருகில் உள்ள ஒழுங்கை, யாழ்ப்பாணம். (6436)

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தஞ்செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி, வட்டக்குளம் முன்பாக, கட்டப்பிராய். (6470)

## வீடு விற்பனைக்கு

இல.39, கனகரட்ணம் வீதி, அரியாலையில் 2 பரப்புக் காணி கிணறு, வான் பயிருடன் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: சி.யோகராசா, ஆவரங்கால் சந்தி. தொலைபேசி இல.070-212665. (6463)

## தேவை

புறொயிலர் இறைச்சிக்கோழிகள் உடன் தேவை. நல்ல விலை தரப்படும். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி, வட்டக்குளம் முன்பாக, கட்டப்பிராய். (6471)

யாழ்நகரின் பிரதான இடங்களை அண்டிய பகுதியில் வர்த்தக நடவடிக்கைகளுக்காக ஒரு கடை உடனடியாக வாடகைக்குத் தேவை. தொடர்பு: இல.313, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (6468)

## தவறிவிட்டது

மகாத்மா வீதி, அளவெட்டி வடக்கைச் சேர்ந்த செ.றாஜிதன் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (இல.823392273V), விசேட அடையாள அட்டையும் (இல.0905014923) தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் திருமதி சௌ. மகாராஜா, பிரதேச செயலகம், வலி.வடக்கு, தெல்லிப்பழை என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும் அல்லது தகவல் தரவும். (6456)

## தவறான வழிகளை ஏற்கமுடியாது அமைச்சர் உரை!

கொழும்பு,ஜூலை29

தவறான வழிகளை மேற்கொண்டு பிரபல பாடசாலைகளில் தங்களது பிள்ளைகளை சேர்ப்பதற்கு பெற்றோர்கள் சிலரால் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் ஒருபோதும் அங்கீகரிக்கப்படமாட்டாது என்று பாடசாலைக் கல்வி அமைச்சர் கரநிமல ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரைநிகழ்த்திய அவர் 'அறிவின் அடிப்படையிலான கல்வியை தங்களது பிள்ளைகளுக்கு வழங்குவது பெற்றோரின் கடமையாகும்' என்றும் கூறினார். (ஒ-9)

## நாணயத் தொலைபேசி கட்டுடைக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம்,ஜூலை29

சண்டிலிப்பாய் சந்திக்கு அண்மையில் பொருத்தப்பட்டிருந்த நாணயத் தொலைபேசி தற்போது கட்டுடை பழைய தபாற்கந்தோர் கட்டடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக யாழ்.ரெலிக்கொம் நிறுவனம் அறிவித்துள்ளது. (எ)

## அமைச்சு செயலருடன் சந்திப்பு!

யாழ்ப்பாணம்,ஜூலை29

சுகாதார அமைச்சின் செயலாளர் நேற்றுக்காலை 9.30 மணிக்கு யாழ்.சுகாதார பிராந்திய பணிப்பாளர், சுகாதார வைத்திய அதிகாரிகள், யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் மற்றும் வைத்திய உத்தியோகத்தர்களுடன் சந்திப்பொன்றை நிகழ்த்தினார்.

இந்தச்சந்திப்பு யாழ். மாகாண பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் செல்வி உமா சிவபாதசுந்தரம் தலைமையில் இடம்பெற்றது.

மாவட்ட வைத்தியசாலைகள், கிராமப்புற வைத்தியசாலைகள் ஆகியவற்றில் நிலவும் குறைபாடுகள் குறித்தும் தாதியர் மற்றும் குடும்ப நல உத்தியோகத்தர் பற்றாக்குறை தொடர்பாகவும் இச்சந்திப்பில் ஆராயப்பட்டது. (ஒ-139)

## வடக்கு - கிழக்கு பிரதேசங்களில்

# இன நல்லெண்ணத்தை வளர்க்க அதிரடிப் படையினர் பணியில்!

கொழும்பு,ஜூலை29

இனங்களுக்கிடையில் நல்லெண்ணத்தை வளர்க்கும் வகையில், அதற்கென விசேட பயிற்சி பெற்ற 46 விசேட அதிரடிப்படையினர் வடக்கு - கிழக்கு பகுதிகளில் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

கொழும்பில் இருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டுள்ளது.

அண்மையில் விசேட அதிரடிப் படைக்கென புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட 250பேர் தற்போது பயிற்சி பெற்று வருகின்றனர் என்றும் - மேற்படி 250 பேருக்கும் தமிழ் - சிங்கள இனங்களிடையே நல்லெண்ண - புரிந்துணர்வுச் சிந்தனைகளை ஏற்படுத்துவது தொடர்பாக விசேடமாகப் பயிற்சி வழங்கப்பட்டு வருவதாகவும் -

விசேட அதிரடிப் படைத் தளபதி ஜெனரல் நிமால் குணதிலக தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பயிற்சி பெறுபவர்களில் 46 பேர் வடக்கு - கிழக்கில் கடமையாற்ற அனுப்பப்படுவர். இவர்கள் தமிழ் - சிங்கள இனங்களுக்கிடையில் நல்லெண்ண சிந்தனைகளைப் பரப்பும் விடயத்தில் ஈடுபடுவர்.

இதுவரை காலமும் பயிற்சி பெறும் விசேட அதிரடிப்படையினர் யுத்த நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக யுத்தப் பிரதேசங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் தற்போது நியமனம் செய்யப்படவுள்ள அதிரடிப் படையினர் பொலீஸ் கடமைக்கு மேலதிகமாக நல்லெண்ண நடவடிக்கையில் ஈடுபடுவர்.

- என்று ஜெனரல் மேலும் தெரிவித்துள்ளார். (எ)

## இந்துசமய விவகார அமைச்சின் ஏற்பாட்டில்

# நல்லைக் கந்தன் ஆலய முன்றிலில் தமிழகப் பேராசிரியர் சொற்பொழிவு

## இன்று மாலை 5 மணிக்கு நடைபெறும்

யாழ்ப்பாணம்,ஜூலை29

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில், இன்று மாலை 5 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றிலில் தமிழகப் பேராசிரியர்கள் நிகழ்த்தும் சமயச் சொற்பொழிவு ஒன்று நடைபெறவுள்ளது.

திருச்சிராப்பள்ளி சிதம்பரப்பிள்ளை மகளிர் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் கே.சேகர், பேராசிரியை ந.விஜயசுந்தரி ஆகியோர் 'அர்த்தமுள்ள இந்துமதம்' என்ற பொருளில் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவர்.

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர் தியாகராஜா மகேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகணானந்தாஜி மகராஜ் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு ஆசியுரை வழங்குவார்.

இந்துமத சிவாச்சாரியர்கள், ஆலய அறங்காவலர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், இந்துசமய நிறுவனத் தலைவர்கள், அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக சமூகத்தினர், வர்த்தகர்கள், சமய ஆர்வலர்கள் இந்தச் சொற்பொழிவு நிகழ்வில் கலந்துகொண்டு பயன்பெற வேண்டுமென இந்து சமய விவகாரங்கள் அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன் கேட்டுள்ளார். (எ)

## பூங்காவும் அரங்கும் அமைக்கத் திட்டம்

சண்டிலிப்பாய்,ஜூலை29

பண்டத்தரிப்பு காலையடி மறுமலர்ச்சி மன்றம் இப்பகுதியிலுள்ள பாலர் பாடசாலைகளில் கற்கும் மாணவரது நலன்கருதி சிறுவர் பூங்கா ஒன்றையும் கலைநிகழ்ச்சிகள் நடத்த வசதியாக திறந்தவெளி அரங்கு ஒன்றையும் நிறுவத் தீர்மானித்துள்ளது.

இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வசித்துவரும் இக்கிராமத்தைச் சேர்ந்த குடும்பங்களின் உதவியை பெறுவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளதாக மன்றத்தின் தலைவர் அழ.பகீதரன் தெரிவித்துள்ளார். (ஒ-135)



பருத்தித்துறை மாதனையூர் செந்தமிழ்த்திலகம் பண்டிதர் கு.க. சிங்காரவேலு எழுதிய 'ஓதும் புராணத் தொகுப்பு நூல்' வெளியீட்டு விழா மாதனை ஸ்ரீ காளியம்மன் கோயில் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

நூலாசிரியருக்கு பருத்தித்துறை மாவட்ட வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் சி.கதிரைவேற்பிள்ளை பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதைப் படத்தில் காணலாம். (எ-173)

# 'கிறீஸ்' கடத்தல் வழக்கில் ஐந்து பேருக்கு பிணை

வலி.வடக்கு,ஜூலை29

உயர்பாதுகாப்பு வலயமான காங்கேசன்துறைப் பகுதியில் இருந்து உராய்வு நீக்கியை (கிறீஸ்) சட்டவிரோதமாக கடத்தி விற்பனை செய்தது சம்பந்தமாகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த நான்கு பொலீஸாரும் ஒரு பொதுமகனும் கடந்த வியாழக்கிழமை மல்லாகம் மாவட்ட நீதிபதி பா.சுப்பிரமணியத்தினால் பிணையில் விடப்பட்டனர்.

5 பரல்கள் உராய்வு நீக்கியை சட்டவிரோதமாகக் கடத்தி வந்து தனியார் எரிபொருள் நிலையத்திற்கு விற்பனை செய்ததாகக் குற்றம் சாட்டி சுன்னாகம் பொலீஸார் அதிகாரி தரத்தில் உள்ள ஒருவர் உட்பட ஐந்து பொலீஸாரையும் இரண்டு பொதுமக்களையும் கைது செய்து நீதிமன்றில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் ஆஜர் செய்திருந்தனர்.

இவர்களில் பொலீஸ் அதிகாரியும் பொதுமகன் ஒருவரும் ஏற்கனவே நீதிமன்றினால் சுகவீனம் காரணமாக பிணையில் விடப்பட்டு இருந்தனர்.

தற்போது நான்கு பொலீஸாரும் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளரும் தலா 10ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் இருவர் கொண்ட மன்று ஏற்கக்கூடிய 10 ஆயிரம் ரூபா ஆட்பிணையிலும் விடப்பட்டுள்ளனர். (ஒ-86)

# எட்டு மாதங்கள் ஆகியும் அ.அட்டை கிடைக்கவில்லை

## விண்ணப்பித்தோர் விசனம்

வலி.வடக்கு,ஜூலை29

கடந்த ஆண்டு இடம்பெற்ற குறைநிவர்த்தி சேவையில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களில் பலருக்கு அடையாள அட்டைகள் எட்டு மாதங்கள் கடந்த நிலையிலும் கிடைக்கப் பெறவில்லை என்று கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கு சில நாள்களுக்கு முன்னர் யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெற்ற மக்கள் குறைகேள் சேவையில் விண்ணப்பித்தவர்களில் பலருக்கே தேசிய அடையாள அட்டைகள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

இதேசமயம் ஏற்கனவே தேசிய அடையாள அட்டை வைத்திருந்தவர்கள், பல்வேறு பதிவுத் தேவைகளை முன்னிட்டு தமது அடையாள அட்டைகளை இணைத்தவர்களில் பலரும் அவற்றை மீளப் பெறமுடியாது தவிப்பதாகவும் கூறப்படுகிறது. (ஒ-86)


## உழவு இயந்திர உரிமையாளர் சங்கம் முக்கிய கலந்துரையாடல்

வடமராட்சி உழவு இயந்திர உரிமையாளர் சங்க அமைப்புக் கூட்டம் இன்று (29.07.2002) திங்கட்கிழமை மாலை 4.00மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும். அரசியல் பிரமுகர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொள்வார்கள்.

வடமராட்சியிலுள்ள சகல உழவு இயந்திர உரிமையாளர்களையும் தவறாது கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர் - செயலாளர்.
உழவு இயந்திர உரிமையாளர் சங்கம்.
பருத்தித்துறை.

(6474)


## மரண அறிவித்தல்

### திருமதி சின்னத்தம்பி இராஜபாக்கியம்

யாழ்ப்பாணம், கொட்டடி வைரவர் கோயிலடி வீதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கரவெட்டி, விக்னேஸ்வராக் கல்லூரி வீதியை வசிப்பிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்ற வல்லிபுரம் சின்னத்தம்பி (வெள்ளையப்பா) அவர்களின் அன்பு மனைவியுமான திருமதி சின்னத்தம்பி இராஜபாக்கியம் அவர்கள் (24.07.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2002) திங்கட்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கரவெட்டி சோனப்பு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*விக்னேஸ்வராக் கல்லூரி வீதி,*
*கரவெட்டி.*
*021-63212.*

(6467)

தகவல்:
சி.பிரபாகரன்
(மகன்)


பரம்பரை பரம்பரையாக மக்களின் நன்மதிப்பை பெற்ற ஆயுர்வேத தயாரிப்பு.



மூவ் பாம்




தசைவலி, தசைப்பிடிப்புகளிலிருந்து உடனடித்தீர்வு

மூட்டு வலிகளிலிருந்து உடனடி நிவாரணம்

விளையாட்டின்போது ஏற்படும் அனைத்து வலிகளுக்குமான முழுமையான நிவாரணி



இடுப்பு, முதுகு வலிகளிலிருந்தும் நிவாரணமளிக்கிறது

(C/23094)

விநியோகிப்போர்
பார்க்கோ மார்க்கடிங் சர்விசஸ் (பி) லிமிடெட் 074-814559

உதயன்

## அடிப்படைப் பேச்சுக்கு முன்னரான சந்திப்புக்கள்

பொருளாதார மறுசீரமைப்பு, விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கத்தை லண்டனில் சந்தித்துப் பேசியிருக்கின்றார்.

தம்முடன் சேர்ந்து சமாதானப் பேச்சுக்கள், முயற்சிகள் தொடர்பான விடயங்களை கையாள்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இரண்டு அமைச்சர்களை நியமித்திருக்கின்றார். ஒருவர் மிலிந்த மொறகொட. மற்றவர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ்.

இவர்களில் ஒருவரே புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்துப் பேசியிருக்கின்றார்.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுக்கள் இன்னும் ஆரம்பமாகவில்லை. கட்டமைப்பு ரீதியான உயர்மட்டப் பேச்சுகளுக்கு (Structured Talks) இன்னும் காலம் இருக்கின்றது. புலிகள் மீதான தடைநீக்கம் உட்பட பல்வேறு கட்டங்களைத் தாண்டிய பின்னர்தான் அந்தப் பேச்சுக்கள் இடம்பெறும் என்பது வெளிப்படை. அது பெரும்பாலும் செம்ரெம்பர், ஒக்ரோபரில்தான் நடக்கும் என்பதுதான் தற்போதைய நிலைப்பாடு.

எனினும் அதற்கு முன்னரும் - அந்தக் கட்டமைப்பு பேச்சுகளுக்கு வழிசமைக்கும் விதத்திலான - பூர்வாங்கப் பேச்சுக்கள், சந்திப்புக்கள் அவசியமாகின்றன.

அத்தகைய தேவைகளை நிறைவுசெய்யும் விதத்திலான சந்திப்புக்களில் ஒன்றே லண்டனில் நிகழ்ந்திருக்கின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சமாதான செயலணியின் செயலாளர் பேர்னாட் குணதிலக, விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை கிளிநொச்சியில் சந்தித்துப் பேசியமை, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ புலிகளின் பிராந்தியத் தளபதிகளுடன் தொடர்புகொண்டு உரையாடி வருகின்றமை எல்லாம் இந்தவகை சார்ந்த சந்திப்புக்களே.

அடிப்படைப் பேச்சுக்கு முந்திய இந்த வகையான சந்திப்புக்கள் எல்லாம் பேச்சுக்கு வழிசெய்யும் பூர்வாங்க ஏற்பாடுகளே. இவற்றை அரசு - புலிகள் நேரடிப் பேச்சாக எடுத்துக்கொள்ள முடியாது.

என்றாலும் சமாதான முயற்சிகள் தொய்ந்து, மந்தமாகிவிடவில்லை; அவை முன்னகர்ந்து கொண்டிருக்கின்றன என்பதையும் -

"உடன் பேச்சு; இல்லையேல் போச்சு!" என்ற ரீதியில் - "எடுத்தேன்; கவிழ்த்தேன்!" என்ற பாணியில் - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவசரப்பட்டு குழப்புவதில் நியாயமில்லை என்பதையும் -

இத்தகைய சந்திப்புக்கள் தெளிவுபடுத்தத் தவறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான வழிகள் குறித்து ஆராய்ந்து கட்டமைப்பு ரீதியான பேச்சுக்களில், தடை நீக்கப்பட்ட நிலையில், சம அந்தஸ்தோடு அமர்ந்திருந்துதான் பேசுவோம் என்பதை புலிகள் ஏற்கனவே தெளிவுபடுத்தி விட்டார்கள்.

அதற்கு முன்னர் பூர்வாங்கப் பேச்சுக்கள், சந்திப்புக்கள் பல இடம்பெறலாம். ஆனால் அவை கட்டமைப்பு ரீதியான பேச்சுக்களாகிவிடா என்பதே புலிகளின் நிலைப்பாடு.

புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்திக்கத் தாம் விரும்புவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவில் வைத்து பகிரங்கமாகத் தெரிவித்திருக்கின்றார்.

இது தொடர்பாக பிரதமர் ரணிலோ, அவரது அரசோ உத்தியோகபூர்வமாக புலிகளுக்கு ஏதும் இன்னும் அறிவிக்கவில்லை. உத்தியோகபூர்வமாக அறிவித்தால் பிரதமர் ரணிலை, வன்னியில் புலிகளும் அதன் தலைவர் பிரபாகரனும் நிச்சயமாக வரவேற்பர் என நம்பலாம்.

அடிப்படைப் பேச்சுக்களுக்கு முன்னர் அத்தகைய உயர்மட்டச் சந்திப்புக்கள் நடந்தால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

# கடந்தகாலக் குளறுபடியால் 'றான்'க்கு நிதி இல்லையாம்!

வலி.வடக்கு,ஜூலை29

வடக்கு புனரமைப்பு, மீள்குடியேற்ற அதிகார சபைக்கு (றான்) இவ்வாண்டுக்கான வேலைத்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு செய்வதில் பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளதாகத் தெரியவருகிறது.

கடந்த ஆண்டு இந்த அமைச்சுக்கு பலகோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அப்பணம் பல்வேறு திட்டங்களின் பெயரில் அதிகாரசபையால் விநியோகமும் செய்யப்பட்டது.

ஆனால் இப்பணம் எதன் அடிப்படையில் எவ்வாறு, யாரால் விநியோகம் செய்யப்பட்டது என்பதில் தற்போது பிரச்சினைகள் எழுந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

மேற்படி அதிகார சபையால் யார்யாருக்கு பணம் வழங்கப்பட்டது, அப்பணத்தை கொடுத்தமைக்கான பற்றுச்சீட்டுக்கள் மற்றும் செலவுகளுக்கான உறுதிச் சீட்டுக்கள் என எவையும் சீரான முறையில் இன்றுவரை பேணப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

கடந்த வாரம் வடக்கு புனரமைப்பு, மீள்குடியமர்வு அதிகார சபையின் தலைமையகத்தில் இருந்து கணக்காளர் இங்கு வந்து மேற்படி பணக் கொடுப்பனவுகள் மற்றும் செலவுகளுக்காக பற்றுச்சீட்டுகளை அரச உயர் அதிகாரிகள், கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் போன்றவர்கள் கையளிக்க வேண்டும் என்று கோரியதாகவும் -

இதற்கு அவர்களில் சிலர் பணக்கொடுப்பனவு எதற்கென்றே தெரியாமலும், தாங்கள் கேட்காமலும் பிரதேச சபைகளினால் தங்களுக்கு வழங்கப்பட்டதால், அதிகார சபைக்கு கணக்குகளை சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் ஏதும் இல்லை என்று தெரிவித்துவிட்டதாகவும் 'றான்' வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசின் சட்ட விதிகளுக்குட்படாத, பதிவுகள் இல்லாத பல நிறுவனங்களுக்கு எந்தவகையான நிதிப் பிரமாணங்களும் கடைப்பிடிக்கப்படாமல் தனியார்களின் பெயர்களிலும், பொது அமைப்புக்கள் என்ற அடிப்படையிலும் கடந்த ஆண்டில் 'றான்' நிதி வழங்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

இந்த நிலையிலேயே பெற்ற பணத்திற்கான பற்றுச் சீட்டுகளை பெற்றுத்தருமாறு அரசு திணைக்களத் தலைவர்களிடம் 'றான்' கேட்கும்போது எதன் அடிப்படையில் எங்கிருந்து பெற்றுக்கொடுப்பதென்று தெரியாமல் அவர்கள் கைவிரித்துள்ளதாகவும் அறியப்படுகின்றது.

கடந்த ஆண்டு பணம் கொடுக்கும்போது என்ன திட்டங்களுக்கென்று ஆரம்பக்கூற்று அறிக்கையோ அன்றி திட்டங்களோ குறிப்பிடப்படாமலே ஒரு சிலரின் செயற்பாட்டின் பெயரில் நிதி வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதன் காரணமாகவே கணக்குகள் யாவும் உரிய அரச உத்தியோகத்தர்களினால் சீர் செய்யப்படும்வரை வடக்கு புனரமைப்பு, மீள் குடியேற்ற அதிகார சபைக்கு யாழ்.மாவட்டத்திற்கான இவ்வாண்டுக்குரிய நிதி ஒதுக்கப்படமாட்டாது எனக் கூறப்படுகிறது. (ஒ-86)

## வேலைவாய்ப்புக்கள் உட்பட தொலைத்தொடர்புத்துறையில் கணிசமான மாற்றங்கள் ஏற்படும்

### அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை29

அடுத்த இரண்டு மாத காலத்தில் தொலைத் தொடர்பு துறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட இருக்கின்றன.

அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் இடம்பெற இருக்கும் இந்த மாற்றங்களின் நோக்கம் வெளிப்படையாகவும், சரியாகவும் பொதுமக்கள் தகவல்களைப் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்துவதாகும்.

மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் அநுராதபுரத்தில் புதிய தபால் நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்:-

அடுத்த மாதம் அளவில் தொலைத்தொடர்பு வழிமுறை முற்றாக மாற்றியமைக்கப்படும். ஆயிரக்கணக்கான வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும் விதத்தில் போட்டி அடிப்படையில் இந்தத் துறையை புனரமைகக அரசு உத்தேசித்துள்ளது.

இதன்மூலம் கிராமப் பகுதிகளில் வாழும் அதிக எண்ணிக்கையான மக்கள் தொலைபேசி வசதிகளை பெற்றுக்கொள்வார்கள்.

அடுத்த சில மாதங்களுக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட இருக்கும் சுதந்திர தகவல் சட்டத்தின் மூலம் ஊடகத்துறையைச் சேர்ந்தவர்கள் சுதந்திரமாக தமது பணிகளை மேற்கொள்ள முடியும்.

தற்போதைய பத்திரிகைமன்றம் கைவிடப்பட்டு பத்திரிகைத் துறைக்கான ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட இருக்கிறது.

ஊடகவியலாளர்கள் அங்கம் வகிக்கும் இந்த ஆணைக்குழு 2 மாதங்களுக்குள் அமைக்கப்படும். - என்றார். (ஒ-9)

## வலிகாமம் பகுதியில் சட்டவிரோத மின்பெற்ற 9பேர் திடீர் சோதனையில் சிக்கினர்

### வியாழன் இரவு சம்பவம்

யாழ்ப்பாணம்,ஜூலை29

வலிகாமம் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு மேற்கொண்ட திடீர் சோதனையின்போது சட்டவிரோதமாக மின் பெற்ற 9பேர் கையும் மெய்யுமாகப் பிடிபட்டுக்கொண்டனர்.

சுன்னாகம் மின்சாரசபை அதிகாரிகள், சுன்னாகம் பொலிஸாருடன் இணைந்து கோண்டாவில் மேற்கு, இணுவில், சுதுமலை வடக்கு, உடுவில் ஆகிய பகுதிகளில் இந்த திடீர் சோதனையை மேற்கொண்டிருந்தனர்.

இவ்வாறு மேற்படி குழுவினரால் கைதுசெய்யப்பட்ட 3 பெண்களும், 6 ஆண்களும் கடந்த வெள்ளியன்று மல்லாகம் நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டபோது அவர்களை தலா 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

இதற்கிடையில் - வலிகாமம் பகுதியில் அதிகரித்து வரும் சட்டவிரோத மின் பாவனையாளர் குறித்து மின்சார சபை அதிகாரிகள் தொடர்ந்தும் உரிய நடவடிக்கை எடுப்பர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ)

### நாளை

ஆடி 14

செவ்வாய்க்கிழமை

(30.07.2002)

திதி : ஷஷ்டி

முன்னிரவு 11.32 வரை.

நட்சத்திரம்: உத்தரட்டாதி

காலை 6.32 வரை

சுபநேரம் : 10.33 - 12.03

ராகுகாலம் : 3.03 - 4.33

(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

இறந்தகால அனுபவமும், எதிர்கால நம்பிக்கையுமே நிகழ்காலத்தில் மகிழ்ச்சியுடன் வாழவைக்கின்றன.

## கள்ளநோட்டுகள் புழக்கம்

வலி.வடக்கு,ஜூலை29

யாழ்ப்பாணத்தில் கள்ளநோட்டுக்களின் புழக்கம் காணப்படுவதாக வர்த்தகர்கள் மற்றும் வங்கி வட்டாரங்கள்மூலம் தெரியவருகின்றது.

தென்பகுதியில் புழக்கத்தில் விடப்பட்ட கள்ள நோட்டுக்கள் ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் வடபகுதிக்கும் எடுத்துவரப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

வங்கி அலுவலர் ஒருவர் கள்ள நோட்டுப் பற்றித் தெரிவிக்கையில் பணத்தாள்களில் இருந்து கள்ள நோட்டுகள் நிறத்தில் வேறுபட்டுக் காணப்படும் என்றும் - அளவில் உண்மையான பண நோட்டுகளை விட பெரிதாகவோ அல்லது சிறிதாகவோ காணப்படும் என்றும் - தெரிவித்தார்.

இதேசமயம் அச்சு அசலாக உண்மையான பணத் தாள்களைப் போன்றே தோற்றமளிக்கும். கள்ள நோட்டுக்களின் புழக்கம் தென்னிலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாகவும் -

ஆகவே, பணக் கொடுக்கல் வாங்கல்களின்போது கள்ள நோட்டுக்கள் பற்றி பொதுமக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் என்றும் - வர்த்தக மற்றும் வங்கி வட்டாரங்கள் அறிவுறுத்தியுள்ளன. (ஒ-86)

## சாவகச்சேரி வைத்தியசாலையில் ஒரேயொரு மருத்துவரே பணியில்!

தென்மராட்சி,ஜூலை29

சாவகச்சேரி மாவட்ட வைத்திய சாலையில் ஒரேயொரு மருத்துவரே கடமையாற்றுவதால் 'கிளினிக்' நடைபெறும் நாள்களில் ஆஸ்பத்திரிக்கு வரும் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகக் கூறப்படுகிறது.

பிரதி செவ்வாய்க்கிழமைகளில் பொதுமருத்து சிகிச்சையும் சனிக்கிழமைகளில் சலரோக சிகிச்சையும் நடைபெறுவதால் அன்றைய தினங்களில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறவரும் நூற்றுக்கு மேற்பட்ட நோயாளர்கள் மணிக்கணக்கில் காத்திருக்க வேண்டியுள்ளதாம்.

இந்த இரு சிகிச்சைப் பிரிவுகளுக்கும் குறிப்பிட்ட நாள்களில் சுமார் 80 நோயாளர்கள் வருவதால் 'கிளினிக்' முடியும் வரை ஏனைய நோயாளர் காத்திருக்க வேண்டியுள்ளது. ஆஸ்பத்திரியில் இருக்கை வசதிகள் இல்லாததால் நோயாளர்கள் விறாந்தையிலும் நிலத்திலும் உட்கார்ந்து இருப்பதைக் காண முடிகிறது.

ஆஸ்பத்திரிக்கு வரும் நோயாளர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதையடுத்து 'கிளினிக்' நடைபெறும் நாள்களில் மேலதிகமாக ஒரு மருத்துவரையாவது கடமையாற்ற ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறு யாழ்.சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளரை நோயாளர்கள் கோரியுள்ளனர். (ஒ-117)

## ஆனைக்கோட்டைப் பகுதியில் வாந்திபேதி அறிகுறியாம்!

### நோய்த் தடுப்பு பணி தீவிரம்

மயிற்றோட்ட நோய் காரணமாக யாழ்.அரசினர் போதனா வைத்தியசாலையில் கடந்த வாரம் அனுமதிக்கப்பட்ட ஆனைக்கோட்டையைச் சேர்ந்த 36 வயது நபர் வாந்திபேதி நோய் ஏற்பட்டுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளார்.

இதனையடுத்து மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் ஆனைக்கோட்டைப் பகுதியில் வாந்திபேதி நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இப்பகுதிப் பொதுசுகாதாரப் பரிசோதகர்கள் நோய்த்தடுப்புப் பிரசாரப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றார்.

இலேசான காய்ச்சல், சத்தி போன்று மலம் கழித்தல், வாந்தி மற்றும் மலம் கழிக்கப்படல் போன்ற நோய் அறிகுறிகள் இப்பகுதியில் யாருக்காவது காணப்படுமானால் உடனடியாக அது குறித்து அந்தப் பிரிவு பொது சுகாதார பரிசோதகருக்கு அறிவிக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - ஆனைக்கோட்டை உயரப்புலம் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கும், சுழிபுரம் மத்தியைச் சேர்ந்த ஒருவருக்கும் டெங்குக் காய்ச்சல் நோய் ஏற்பட்டுள்ளதையடுத்து அப்பகுதிகளிலும் சுகாதாரப் பகுதியினர் தீவிர நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். டெங்குக் காய்ச்சல் பற்றிய துண்டுப் பிரசுரங்களும் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (ஒ-135)

## 'வாட்'டை திறக்கக் கோரிக்கை

சாவகச்சேரி ஆஸ்பத்திரியின் 'வாட்டு'களை உடனடியாகச் செயற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ்.சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளரைக் கோரும் தீர்மானத்தினை சாவகச்சேரி பிரதேசசபை நிறைவேற்றியுள்ளது.


தென்மராட்சியில் 70 வீதமான மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள போதிலும் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுடன் மட்டும் செயற்பட்டு வருவதாகவும் -


தற்போது செயற்படக்கூடிய கட்டட வசதிகளில் 'வாட்'டுகளை அமைத்து வைத்திய சேவையினை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் - தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-117)


## புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை - 2002
## மாதிரி வினாத்தாள் இல. - 7
### பகுதி 1

தரம் 5 நேரம்:- 45 நிமிடம்

★ **01-05 வரையுள்ள வினாக்களில் உள்ள படங்களைக் குறித்த ஓர் ஒழுங்கில் வரிசைப்படுத்தி நடுவில் வரும் உருவின் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**


01.

1 2 3 4 5 (............)

02.

1 2 3 4 5 (............)

03.

1 2 3 4 5 (............)

04.

1 2 3 4 5 (............)

05.

1 2 3 4 5 (............)

★ **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

06. கபிலனின் வீட்டிற்கும் மைதானத்திற்கும் இடையே பல்வேறு வகைத் தாவரங்கள் உள்ள இடத்தினைப் படம் காட்டுகின்றது.




கபிலன் தனது வீட்டிலிருந்து மைதானத்திற்குக் காட்டிய ஒற்றையடிப் பாதைவழியே நடந்து சென்றான். அவன் எந்த ஒழுங்கில் தாவரங்களைக் கடந்து சென்றிருப்பான்?
(1) புல், தென்னை, பலா, முந்திரிகை, மா
(2) முந்திரிகை, புல், தென்னை, பலா, மா
(3) மா, பலா, தென்னை, புல், முந்திரிகை
(4) முந்திரிகை, மா, புல், தென்னை, பலா


07. ஒரு கமக்காரனிடம் எப்பொழுதும் இருக்க வேண்டியது?
(1) மாடு (2) நிலம் (3) பணம் (4) கலப்பை

08. பஸ் வண்டியில் அளவுக்கு மேலாகப் பிரயாணிகளை ஏற்றாமல் இருப்பது?
(1) அரசாங்கத்திற்கு வீணே அதிக பணம் சேர்ந்துவிடும் என்பதற்காக.
(2) பல இடங்களில் பிரயாணிகளை ஏற்றி, இறக்கி விடவேண்டும் என்பதற்காக.
(3) பிரயாணிகள் சௌக்கியமாகப் பயணம் செய்வதற்காக.
(4) எரிபொருள் முடிந்துவிடும் என்பதற்காக.

09. வித்திகன் தனது காணியில் பயறோ அல்லது உழுந்தோ அல்லது கடலையோ விதைத்திருக்கின்றான். அவனுடைய மகன் அங்கு கடலை விதைக்கவில்லை என்று கூறுகின்றான். ஆகவே, அக்காணிக்குள்
(1) பயறு விதைக்கப்பட்டிருக்கிறது.
(2) உழுந்து விதைக்கப்பட்டிருக்கிறது.
(3) பயறும் உழுந்தும் விதைக்கப்பட்டிருக்கிறது.
(4) பயறு அல்லது உழுந்து விதைக்கப்பட்டிருக்கிறது.

10 பின்வருவனவற்றுள் முறைப்படி ஒழுங்குபடுத்தப்பட்ட செயற்பாடுகளைக் கொண்ட ஒரு விடை உள்ளது. அது எது?
(1) விதைத்தல், மிதித்தல், உழுதல், களையெடுத்தல், வெட்டல்
(2) உழுதல், விதைத்தல், களையெடுத்தல், வெட்டல், மிதித்தல்
(3) உழுதல், களையெடுத்தல், விதைத்தல், வெட்டல், மிதித்தல்

★ **கீழே முதலில் தரப்பட்ட கடிகாரமுகம் காட்டும் நேரத்தினை அடிப்படையாகக் கொண்டு ஏனைய நான்கு கடிகாரங்களுக்குத் தரவுகளின்படி நேரங்களைக் கண்டுபிடித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்குரிய இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**


(1) (2) (3) (4)

முதலாவது கடிகாரத்தைவிட 2ஆவது கடிகாரம் 45 நிமிடம் பிந்திக் காட்டுகிறது. முதலாவது கடிகாரத்தைவிட 4ஆவது கடிகாரம் 30 நிமிடம் முந்திக் காட்டுகிறது. இரண்டாவது கடிகாரத்தை விட மூன்றாவது கடிகாரம் 15 நிமிடம் முந்திக் காட்டுகிறது.

11. மூன்றாவது கடிகாரம் காட்டும் நேரம் யாது?
(1) 9.15 (2) 8.15 (3) 8.30 (4) 9.30 (..........)

12. ஆக முந்தி நேரத்தைக் காட்டும் கடிகாரம் எது?
(1) 1 (2) 2 (3) 3 (4) 4 (..........)

★ **பின்வரும் உரைப்பகுதியினைக் கவனமாக வாசித்தபின் அதன் கீழ் உள்ள வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

மாணவர்கள் திரளாக வந்து, புகையிரத நிலையம்வரை சென்று, ஆசிரியரைப் பயணம் அனுப்பினார்கள். புகைவண்டியில் ஏறி, வாசலில் நின்றவண்ணம் கோவிந்தன் தனது மாணவர்களைப் பார்த்தான். விழிகளில் நீர் திரையிட எல்லோரும் தம்மை விட்டுப் பிரியும் ஆசிரியரைக் கைகூப்பி வணங்கினார்கள். புகையிரதமும் புறப்பட்டது.

13. "திரளாக வந்து" என்பது குறிக்கும் பொருள்
(1) ஒவ்வொருவராக வந்து (2) கூட்டமாக வந்து
(3) மெல்லமாக வந்து (4) தனியாக வந்து

14. இப்பந்தியில் ஆசிரியர் பெயர் காணப்படுகின்றதா?
(1) ஆம் (2) இல்லை (3) கூறமுடியாது (4) தெரியாது

15. இப்பந்தியில் கூறப்படும் சந்தர்ப்பம் யாது?
(1) வேற்றூர் பயணம் (2) சோகக் காட்சி
(3) வேலை நீக்கம் (4) பிரிவுபசாரம்


16. "திரையிட" என்பதன் பொருள்
(1) திரைச்சீலையால் மூட (2) அலையெறிய
(3) மறைக்க (4) சுருங்க

★ **கீழுள்ள மூன்று எண்கூற்றுகளும் உண்மையானவை.**

○ + □ = 13 | ○ - □ = 3 | ○ + 1 = △

17. இதனடிப்படையில் பின்வருவனவற்றுள் ஒன்று உண்மையாகும். அது எது எனத் தெரிந்து அது குறிக்கும் ஆங்கில எழுத்தைச் சுற்றி வட்டமிடுக.
A. △ + □ = 16 B. △ + 3 = 11
C. □ - 1 = 8 D. ○ + △ = 17

★ **அச்சகம் ஒன்றில் குறித்த ஆண்டில் அச்சிடப்பட்ட புத்தகங்களின் விவரத்தை படவரைபு காட்டுகிறது. A வகைப் புத்தகங்களின் எண்ணிக்கை 500 ஆகும்.**




படவரைபு விளக்கம்: மிக அதிகமாக அச்சிடப்பட்ட புத்தகம் சிறுவர் கதைகள் ஆகும். மிகக் குறைவாக அச்சிடப்பட்ட புத்தகங்கள் நாவல்கள் ஆகும். விஞ்ஞானம், கவிதைப் புத்தகங்கள் இவை இரண்டும் சம அளவானவை. நாவல்களைவிட 50 புத்தகம் கூடுதலாக வரலாற்றுப் புத்தகங்கள் அச்சிடப்பட்டன. இவற்றோடு அழகியல் புத்தகமும் அச்சிடப்பட்டது.

இவற்றை அடிப்படையாக வைத்துப் பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.


18. வரலாற்றுப் புத்தகங்கள் எத்தனை அச்சிடப்பட்டன.
(1) 300 (2) 375 (3) 450 (4) 500


19 சிறுவர் கதைப் புத்தகமும், விஞ்ஞானப் புத்தகமும் சேர்த்து எத்தனை புத்தகங்கள் அச்சிடப்பட்டன?
(1) 500 (2) 700 (3) 950 (4) 1000

20. எந்த இரண்டு வகைப் புத்தகங்களைச் சேர்த்தால் 700 புத்தகங்கள் அச்சிடப்பட்டிருக்கும்?
(1) சிறுவர் கதை, நாவல் (2) விஞ்ஞானம், கவிதை
(3) வரலாறு, நாவல் (4) நாவல், அழகியல்


★ **வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைக் கண்டு அதனை வெற்றிடத்தில் எழுதுக.**

21. (2) → (2) ⇨ (8)    (3) → (2) ⇨ (12)    (4) → (3) ⇨ ( )

22.



23.



★ **ஈரெழுத்துச் சொல் ஒன்றைக் கூட்டுக்குள் சேர்க்கும்போது பல சொற்களை உருவாக்கமுடியும். அந்த ஈரெழுத்துச் சொல்லை எழுதுக.**

24.



★ **சொற்றொடர்புகளை அவதானித்து அடுத்துவரும் சொல்லை எழுதுக.**


25. ஆடு - கடா, மாடு - காளை, கோழி - ..............................
26. காலை - மாலை, நீதி - அநீதி, மேடு - ..............................
27. வானம்வில் - வானவில், பசுபால் - பசுப்பால்
யோன்காசு - ..............................
28. கண்டுகேட்டு, உண்டு உடுத்து, பாடி ..............................

★ **முதற்சொல்லினது பொருளைத் தரும் சொல்லின் கீழ்க் கோடிடுக.**

29. மரம்: பலா, மா, விருட்சம், கொப்பு, வேர்.
30. உபசாரம்: நிந்தனை, நன்மை, அபகாரம், வரவேற்பு, விருந்து
31. இடுற்ற: அச்சமுற்ற, திடமான, துன்பமுற்ற, பகையற்ற, தீமை
32. அலங்கோலமான: ஒழுங்கற்ற, கீழ்த்தரமான, நேர்மையற்ற, அசிங்கமான

★ **சரியான விடையின் கீழ்க் கோடி(டுக)**


33. கீழ்க் காணப்படுவது ஒரு சதுரவ... மடிக்கப்பட்டு அதில் ஒரு பகுதி வெ...




இக்கடதாசியை விரித்தால் எவ...



(1) (2)

34. கீழ்வருவனவற்றில் சமமான பகுதிகள...




35.

இதன் ...
(1) 92 (2) 142 (3) 144

36. எல்லாவற்றிலும் பாரம் குறைந்த ...




(1) A (2) B (3) C

37. எனது பையில் 25 சத நாணய... 1ரூபா நாணயம் உள்ளன. நான் ... நாணயத்தை எடுத்தேன். அது ...
(1) 50 சத நாணயம் அல்லது 2...
(2) ஒரு ரூபா நாணயம் அல்லது...
(3) 50 சத நாணயம் அல்லது ரூ...
(4) ஒரு ரூபா நாணயம் அல்லது...

38. கண்ணனின் மனைவி மீரா. கண்ண... வின் கணவன் கோபிகன். மீராவி... நீலாம்பரிக்கு கோபிகன் என்ன ...
(1) அப்பா (2) அண்ணா (...

39. மருது நகரமும் விருது நகரமும் ப... நகரம் பாண்டி நகரத்தைவிடப் பெ... நகரத்தை விடச் சிறியது. பருமன...
(1) மருது (2) விருது (3) ...

40. விடுபட்ட இடத்தில் பொருத்தமா...



### பகுதி -2

★ **கீழ்வரும் கடிதத்தினை வாசித்து ... களுக்கு விடை எழுதுக.**

அன்புள்ள அப்பா,
நான் நல்ல சுகமாக இருக்கிறே... சுகத்தை அறிய ஆவலாக உள்ளே... படிக்கின்றேன். ஒழுங்காகப் பாடசா... தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்... பெறுவேன் என்ற நம்பிக்கை எனக்கு... யில் சித்தியடைந்தால், எனக்குத் து... தரவேண்டும். பரீட்சை நெருங்கிவிட்... வில்லை. பரீட்சை முடிந்ததும் நீ... பி.கு.- கொழும்பிலிருந்து எப்ப வ...

01. சதுரப் பெட்டிகள் இட்ட இடத்தில் ... கடிதத்தில் அப்பெட்டிகளினுள் இ...
02. இக்கடிதம் யாரால் யாருக்கு எழு...
..............................
03. இக்கடிதத்தைப் பதிவுத் தபாலில் ... வேண்டிய முத்திரைகளின் பெறு...
..............................
04. இக்கடிதத்தை சாதாரண தபாலில் ... வேண்டிய முத்திரையின் பெறும...
05. பி.கு. - என்னும் சுருக்கம் குறிக்...
..............................
06. அருணன் தபாற்கந்தோருக்குச் சென்... 8 முத்திரைகளையும், ரூபா 4.50 பெ...

# பாம்புகளுடன் விளையாட முற்படும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க!

**தென் இலங்கை அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் குறித்து புதிய கண்ணோட்டத்தில் நோக்குகிறார் "ராவய" பத்திரிகையின் செய்தியாளர் சேகர. அதன் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

நாகபாம்புகளை ஆட்டுவதைச் சிலர் தொழிலாகக் கொண்டுள்ள போதிலும், நாகபாம்பானது விளையாடுவதற்குப் பொருத்தமான பிராணி எனக் கருதப்படுவதில்லை. பாம்பாட்டிகள் தாங்கள் ஆட்டும் பாம்பினது விஷப் பற்களைப் பிடுங்கிய பின்னரே அந்தப் பாம்பை ஆட்டுகிறார்கள். விஷப் பற்களைப் பிடுங்கிய பின்னர் அந்தப் பாம்பு விஷப்பாம்பு போன்று தோன்றினாலும், தனது விஷப் பற்களால் தீண்டும் சக்தியை இழந்த அப்பாவிப் பிராணியாகவே அது இருக்கும்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, விஷப் பற்களைப் பிடுங்காமல் ஒரு நாகத்தை அல்ல ஒரு பாம்புப் பட்டாளத்தையே ஆட்ட முயல்கிறார். பிரதமரின் பாம்பாட்டலைப் பார்த்து ரசிப்பதற்குக் காரணங்கள் இருப்பினும் பாம்பாட்டியும் அதைப் பார்த்து ரசிப்பவர்களும் விஷப் பற்களைப் பிடுங்காத பாம்புக் கூட்டத்துடன் விளையாடுவதால் உருவாகக்கூடிய பயங்கர நிலைமைகுறித்து சிந்திப்பதாகத் தெரியவில்லை.

தனக்கு மக்கள் ஆணை கிடைத்த பின்னர், பிரதம மந்திரியாகத் தனக்குக் கிடைத்த இரண்டாவது இடத்தை யேற்று ஜனாதிபதியுடன் ஒத்துப்போவதா? அல்லது முற்றிலுமாக அரச அதிகாரத்தை தன்வசப்படுத்துவதா?

## மாற்றார் தோட்டத்திலிருந்து.......

என்ற முக்கியமான பிரச்சினைக்கு ரணில் தீர்வுகாண வேண்டியிருந்தது.

ஆனால் பிரதமருக்கு இது தொடர்பாகத் தெளிவான கருத்து இருந்ததாகத் தெரியவில்லை. முதல் சுற்றில் பிரதமர் ஜனாதிபதியுடன் ஒத்துப்போகும் நிலைக்குச் சென்றார். ஒத்துப்போக வாய்ப்புகள் எனப் புரிந்து கொண்டபோது, ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பறிக்கவேண்டும் எனச் சிந்தித்தார். ஆனால், அது தொடர்பாக மக்களின் ஆதரவைப் பெறும் முயற்சிகளில் அவர் வெற்றிபெறத் தவறிவிட்டார்.

பதிலாக, ஜனாதிபதி மற்றும் அவருக்கு நெருங்கியவர்கள் மேற்கொண்டதாகக் கூறப்படும் குற்றங்கள் மற்றும் ஊழல்கள் தொடர்பாக மெதுமெதுவாகக் கண்டறியும் முயற்சிகளைக் கையாண்டார். அவர்களைச் சட்டத்தின்மூலம் சுற்றிவளைப்பதே அவருடைய எண்ணமாக இருக்கலாம்.

ஜனாதிபதியும் அவருக்கு நெருக்கமானவர்களும் மேற்கொண்டதாகக் கூறப்படும் குற்றங்கள் மற்றும் ஊழல்கள் தொடர்பாக ஒழுங்கானமுறையில் விசாரணைகளை மேற்கொள்வதன்மூலம் அவர்களைச் சட்டத்தின் மூலம் சுற்றிவளைக்கமுடியும் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், முக்கியமான அதிகாரங்கள் எதிர்க்கட்சியினரின் கைகளில்

**தமிழில்: கஜனி**

உள்ள நிலையிலேயே இவற்றையெல்லாம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. தங்களைச் சட்டத்தின் முன் நிறுத்துவதே பிரதமரின் குறிக்கோள் என்பதை அவர்கள் அனைவரும் அறிவர். தங்களை அழிக்கும் நடவடிக்கைகளுக்கு இடமளித்து, அவர்கள் எப்போதும் அமைதியாக இருப்பர் எனச் சிந்திக்கமுடியாது. தற்போது பிரதமர் பாம்புகளை ஆட்டும் நடவடிக்கையைக் கவனிக்கும்போது ஆட்டப்படும் பாம்புகள் அழிக்கப்பட இருக்கும் வாய்ப்புகளைப் போலவே, பாம்புகளால் பிரதமர் அழிக்கப்படவும் வாய்ப்புகள் உள்ளன. ★

# இரத்தம் குடிக்கும் ஆசை

மக்களின் நம்பிக்கையின்படி மனித இரத்தத்தைக் குடிக்கும் ஆசை பேய்களுக்கும், பிசாசுகளுக்குமே உள்ளது. புதுமையான விடயம் என்னவெனில் எமது நாட்டின் தலைவிக்கு தனது எதிரியின் (ரணில் விக்கிரமசிங்கவின்) கழுத்தைக் கடித்து இரத்தத்தை உறுஞ்சிக் குடிக்கும் ஆசை ஏற்பட்டுள்ளதுபோல் தெரிகிறது.

கடந்த 14ஆம் திகதிய "சன்டே லீடர்" பத்திரிகையில் வெளியான செய்தியின்படி, சி.ல.சு. கட்சியின் தேர்தல் தொகுதி அமைப்பாளர்களின் கூட்டம் அநுராதபுரத்தில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பேசிய ஜனாதிபதி தன்னைக் கொன்றொழிக்கும் தேவை அரசுக்கு உள்ளது எனவும் -

அமைச்சரவைக் கூட்டத்தின்போதுகூட அவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம் எனவும் -

அவ்வாறான நிலைமையை எதிர்கொள்ளநேர்ந்தால் தான் பிரதமரின் கழுத்தைக் கடிப்பேன் எனவும் -

கூறியதாக அந்தப் பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது.

நாட்டின் தலைவிக்கு ஏற்கனவே பைத்தியம் பிடித்துவிட்டது அல்லது விரைவில் பைத்தியம் பிடிக்கப்போகிறதுபோலத் தெரிகிறது. எனவே, நாட்டின் கௌரவத்தைக் கவனத்திற்கொண்டு அரச நிதியிலாவது அவருக்கு வைத்தியம் செய்து பைத்தியத்தைப் போக்குவது அரசின் பொறுப்பாகும்.

# பொது இடங்களில் தங்கியுள்ள படையினர் வெளியேற்றப்படுவர்!

## பாதுகாப்பு அமைச்சர் உறுதி

கொழும்பு,ஜூலை29

"வடக்கிலும், கிழக்கிலும் முகாம்களாகப் பயன்படுத்தப்படும் பாடசாலைகள் மற்றும் வணக்கஸ்தலங்கள் என்பவற்றில் இருந்து எதிர்வரும் ஒகஸ்ட் 2ஆம் திகதிக்கு முன்னர் படையினரை வெளியேற்ற அரசு திடசங்கற்பம் பூண்டுள்ளது" - என்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"இந்த நடைமுறை பூர்த்தியாகும் பட்சத்தில், விடுதலைப் புலிகளுடன் நடத்தவிருக்கும் பேச்சுக்கள் தொடர்பான பாரிய முட்டுக்கட்டை நீங்கிவிடும். அதன் பின்னர், தொடர இருப்பவை மிக முக்கியமானவையாகும்.

"புரிந்துணர்வு உடன்படிக்கை பல தடவைகள் மீறப்பட்டாலும், இருதரப்பினரும் போர்நிறுத்தத்தை மதித்து நடந்துகொள்கிறார்கள். இதனால் பாதுகாப்பு பற்றிய அச்சம் நீங்கிய நிலையில் இலங்கை மக்கள் சுதந்திரமாக நடமாடுகிறார்கள். போர்நிறுத்தம் அமுலில் இருந்தாலும் இராணுவ வரவு - செலவுத் திட்டத்தில் பாரிய சேமிப்புக்களைக் காணமுடியவில்லை.

"ஆனால் அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே ஆரம்பத்தில் நிலவிய விரோத மனப்பான்மை கணிசமான அளவில் குறைந்துள்ளது" - என்றார். (ஒ-9)

# பிறந்த ஊருக்குச் சென்றுவர இத்தனை கெடுபிடிகளா?

## புலம்பெயர்ந்தோர் விசனம்

ஊர்காவற்றுறை,ஜூலை29

அனலைதீவு, எழுவைதீவு பகுதிகளுக்கு வெளிநாடுகளில் இருந்து தமது உறவினர்களைப் பார்க்கும் பொருட்டும், ஆலய உற்சவங்களில் கலந்துகொள்ளும் பொருட்டும் வருபவர்கள் தமது கடவுச்சீட்டுக்களை இப்பகுதியில் உள்ள கடற்படையினரது சோதனை நிலைகளில் ஒப்படைத்துவிட்டே உள்ளே செல்ல வேண்டியுள்ளதாகக் கூறப்படுகிறது.

அண்மையில் அனலைதீவு ஐயனார் ஆலய வருடாந்த உற்சவத்திற்கு கனடாவில் இருந்து வந்தவர்களிடம் கடற்படையினர் அவர்களது கடவுச்சீட்டுக்களை வாங்கி வைத்துவிட்டே உள்ளே செல்ல அனுமதித்ததாகவும் -

அதுபோன்றே கனடாவிலிருந்து எழுவைதீவில் உள்ள தமது தாய் தந்தையர்களைப் பார்க்க வந்தவர்களிடமும் கடவுச்சீட்டுக்களை வாங்கி வைத்துவிட்டு திரும்பிச் செல்லும் போது அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கனடாவில் இருந்து தாங்கள் வந்தபோது கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் எதுவித கெடுபிடிகளும் இன்றி வந்தபோதும், தாங்கள் பிறந்து வளர்ந்த சொந்த ஊர்களில் கெடுபிடிகளை அனுபவிக்க நேர்ந்தமை குறித்து அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ஒ-16)

## பேராயர் வேண்டுகோள்

கொழும்பு,ஜூலை29

"தேசிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண இலங்கையர்கள் அனைவரும் அணிதிரள வேண்டும்." கொழும்பு மறைமாவட்ட பேராயராக பொறுப்பேற்றுள்ள அதிவணக்கத்துக்குரிய ஒஸ்வேல்ட் கோமிஸ் ஆண்டகை இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பேராயர் கோமிஸின் அதிகாரபூர்வ பதவியேற்பு தொடர்பாக ஒப்புக்கொடுக்கப்பட்ட கூட்டுத்திருப்பலி பெருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை கொழும்பு கொட்டாஞ்சேனை புனித லூசியஸ் தேவாலயத்தில் இடம்பெற்றது. அந்த நிகழ்விலேயே பேராயர் இதனைத் தெரிவித்தார். (ஒ-9)

## அமெரிக்க பிரதிஅமைச்சர் இலங்கை விஜயம்

கொழும்பு,ஜூலை29

அமெரிக்க பிரதி வெளி விவகார அமைச்சர் ரிச்சட் ஆமிடேக் எதிர்வரும் ஓகஸ்ட் மாத இறுதிப் பகுதியில் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வரவுள்ளதாக பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளை பார்வையிடுவதே இவரது விஜயத்தின் பிரதான நோக்கமாக அமையும் எனக்கூறப்படுகிறது. (ஒ-9)

## உணவுமுத்திரை பங்கீட்டால் பாதிப்பு

மானிப்பாய் மேற்குப் பகுதியில் இம்முறை வழங்கப்பட்ட உணவு முத்திரைப் பங்கீட்டின்போது இடம்பெயர்ந்த மக்களும் விவசாயிகள் பலரும் பாதிக்கப்பட்டுள்ளதாக மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனமும் மானிப்பாய் மேற்கு கிராம முன்னேற்றச் சங்கமும் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி உரிய நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதுதொடர்பாக தான் பிரதமருடன் தொடர்புகொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் பெற்றுத்தரவுள்ளதாக அவர் தெரிவித்தார். (ஒ-152)

# கல்விச்சாலைக் காட்சிகள்



அண்மையில் யாழ்.விஜயம் செய்த பாடசாலைக் கல்வி அமைச்சர் சுரநிமல ராஜபக்ஷ, கொட்டடி நமசிவாய வித்தியாசாலையில் அமைக்கப்பட்ட நூலகக் கட்டடத்தையும், கணனி அறையையும் திறந்துவைத்தபோது எடுக்கப்பட்ட படம் இது.

அருகில் பாடசாலை அதிபர் சு.நடராஜலிங்கம், யாழ்.கல்விக் கோட்டப் பணிப்பாளர் ஆ.இராஜகோபால், இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆகியோர் காணப்படுகின்றனர். (எ)



உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்படவுள்ள மூன்று மாடிக்கட்டடத் தொகுதியின் கீழ்மாடிக் கட்டடம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கட்டடத்தின் பெயர்ப் பலகையைத் திறந்துவைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் பாடசாலை அதிபர் கே.யோகராசா மற்றும் பாடசாலைச் சமூகத்தினர் காணப்படுகின்றனர். (எ-180)



மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஆஸ்திரேலியாக் கிளையினர் அண்மையில் கல்லூரியின் கணனிப் பிரிவுக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான ஜெனரேற்றர் ஒன்றை அன்பளிப்புச் செய்தனர்.

இது தொடர்பாக இடம்பெற்ற நிகழ்வில் லயன் எஸ்.பத்மநாதன் கல்லூரி அதிபர் குமாரசாமி சண்முகநாதனிடம் ஜெனரேற்றரைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். அருகில் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப்பிரதிநிதிகள் காணப்படுகின்றனர். (எ)



காங்கேசன்துறை மாவட்ட 22ஆவது சாரணர் பாசறை விழா அண்மையில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது.

மேற்படிப் பாசறை நிகழ்வில் கலந்துகொண்ட சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய மாணவர்களைப் படத்திற் காணலாம். (எ)

# சிங்கள மக்களுக்கு அழைப்பு?

கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்த சிங்கள மக்களை மீண்டும் தமது இருப்பிடங்களுக்கு திரும்புமாறு விடுதலைப் புலிகளின் தலைமை அழைப்பு விடுத்துள்ளது என்று நீர்ப்பாசன அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்பு அரசியல்துறைப் பொறுப்பாளர் கரிகாலனைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்திய பின்னர் இதனைத் தெரிவித்தார். (ம-3)

## யாழ்ப்பாணத்தில் தமிழகப் பேராசிரியர்களின் இந்துமத பேருரை

**இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம், நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றிலில் இன்று (29.07.2002) திங்கட்கிழமை மாலை 5.00மணிக்கு இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சர் மாண்புமிகு தியாகராஜா மகேஸ்வரன் தலைமையில் தமிழகத்தில் இருந்து வருகைதந்துள்ள திருச்சிராப்பள்ளி சிதம்பரப்பிள்ளை மகளிர் கல்லூரி முனைவர் பேராசிரியர் கே.சேகர் எம்.ஏ, எம்.ஈடி, பி.எச்டி அவர்களும், துணை முதல்வர் பேராசிரியை ந.விஜயசுந்தரி எம்.ஏ, எம்.பில் அவர்களும் *"அர்த்தமுள்ள இந்துமதம்"* என்னும் பொருளில் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளனர்.**

இந்நிகழ்ச்சியில் கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் தலைவர் சுவாமி ஆத்மகணானந்தாஜீ மகராஜ் அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கவுள்ளார்.

யாழ்.குடாநாட்டிலுள்ள இந்துமத சிவாச்சார்யர்கள், குருமார்கள், அனைத்து ஆலய அறங்காவலர்கள், இந்து நிறுவனத் தலைவர்கள், பல்கலைக்கழக அனைத்துப் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் மாணவர்களும், அறநெறிப்பாடசாலை ஆசிரியர்கள், அனைத்து வலய பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவ மாணவிகள், அனைத்து இந்துப் பெருமக்கள் மேலும் யாழ்.நகரிலுள்ள திணைக்களங்களைச் சார்ந்த அதிகாரிகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்கள் யாபேரும் இந்த அரிய இந்துமதத்தினுடைய தாற்பரியங்களை சொற்பொழிவுகரூடாக வழங்கவுள்ள தமிழகப் பேராசிரியர்களின் உயர்ந்த கருத்துக்களைக் கேட்டுப் பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கடந்தவாரம் கொழும்பில் இடம்பெற்ற ஆடிவேல் நிகழ்ச்சிக்காக தமிழகத்தில் இருந்து உரையாற்ற வருகைதந்துள்ள இவ்வறிஞர்களின் பல சொற்பொழிவுகள் எமது இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சினால் இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்திலும், ஏனைய ஆலயங்களிலும் இடம்பெற்றபோது மண்டபம் நிறைந்த இந்துசமய ஆர்வலர்களின் அமோக பாராட்டினைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இந்த அரிய சந்தர்ப்பம் யாழ்.குடாநாட்டிலுள்ள சகல பகுதிகளிலுமுள்ள இந்து, சைவப் பெரியோர்களுக்கும், மாணவர்களுக்கும் ஏனையவர்களுக்கும் கிடைத்தற்கரிய வரப்பிரசாதமாகும்.

எனவே, தவறாது சகல இந்துப் பெருமக்களும் இச்சமயப் பேருரை நிகழ்ச்சியில் கலந்து பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*குறிப்பு:-* சொற்பொழிவு நிகழ்வு முடிவடைந்த பின்னர் சகல இடங்களுக்கும் போக்குவரத்து வசதி செய்யப்பட்டுள்ளது.

க.பரமேஸ்வரன்
செயலாளர்,
இந்துசமய விவகாரங்கள் அமைச்சு

(C-23090)


மிக நுட்பமானதும் திறமையான செயற்பாடும் கொண்ட இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்

மிகச் சிறந்த தரம்மிக்க, புதிய மற்றும் மறுசீரமைக்கப்பட்ட இயந்திரங்கள் நம்ப முடியாத விலையில்



- Lathe machines
- Injection moulding machines
- Shapers & surface grinders
- Sheet bending & cutting machines
- Vertical & horizontal milling machines
- Drilling machines



எமது அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் விற்பனைக்கு பிந்திய சேவை வழங்கப்படும்

இலங்கையில் மிகப்பெரிய கையிருப்பைக் கொண்ட நிறுவனம்
Bhathiya Trading Company
PRIVATE LIMITED
Office 7, Katukurunduwatta Road, Ratmalana, Sri Lanka.
Tel: 622402,622403,729820. Fax:94-1-713625, 074-210781
Factory 7D, Postmasters Place, Mt. Lavinia, Sri Lanka. Tel: 729798
E. mail bhathiya@itmin.com
(C/22935)


## இலவச தையல் பயிற்சி வகுப்பு

யாழ்இராமநாதன் வீதியில் உள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் இலவச தையல் பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளன.

மேற்படி பயிற்சியில் இணைந்து கொள்ள விரும்புவோர் எதிர்வரும் முதலாம் திகதி காலை 9 மணிக்கு கிராம அலுவலரின் நற்சான்றிதழ் பிரதியுடன் வருகைதர வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## அரச வாகனங்களில் இலச்சினை பொறிக்கப் பணிப்பு

அரச அலுவலகங்கள் பயன்படுத்தும் வாகனங்களில் அரச இலச்சினையைப் பொறிப்பதோடு மட்டுமன்றி அவ்வாகனங்களில் சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் பெயரையும் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சகல திணைக்களத் தலைவர்களையும் அரச நிர்வாக முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு சுற்றறிக்கை மூலம் பணித்துள்ளது. (ஓ-51)

## கொக்குவில் இந்து தமிழ் விழா

கொக்குவில் இந்துக் கல்லூரி தமிழ்ச்சங்கம் ஏற்பாடு செய்துள்ள தமிழ்விழா நிகழ்வு நாளைமறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் நிநிரஞ்சன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் க.அருந்தாகரன பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

தனி நடனம், பேச்சு, கவிதை, பட்டிமன்றம், நாடகம் என்பன சிறப்பு நிகழ்வுகளாக இடம்பெறும். (எ)


DISSERTATION BINDING
பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமைவாகக் கட்டிக்கொடுக்கப்படும். இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் 350/=.
BHARATHI PATHIPPAKAM
OFF-SET PRINTERS
430, K.K.S. ROAD, JAFFNA
PHONE: 021-3081
(C-23083)


## கப்டன் அன்பரசியின் நினைவுதினம் அனுஷ்டிப்பு

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கப்டன் அன்பரசியின் 7 ஆவது ஆண்டு நினைவு நாள் நேற்று முன்தினம் சனிக்கிழமை உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, பட்டிப்பளை பிரதேசத்தில் முன்மாரிக் கோட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் சந்திரநாயகி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கப்டன் அன்பரசியின் உருவப்படம் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பானுகா ஈகச்சுடர் ஏற்றி நிகழ்வைத் தொடக்கிவைத்தார். (எ-9)


நீண்ட கால அச்சுப்பதிப்பிற்கு நுட்பமானதும் உற்பத்தித்திறன் கூடியதுமான இயந்திரங்கள்

Machines and accessories avilable
- Heidelberg(KORD/SORD/SORDZ)
- RYOBI/HAMADA/DAVIDSON
- Paper cutters
- Wire stitchers
- Plate Makers
- Laminating machines
- Corrugated box making machines

அனைத்து வகையான புதிய மற்றும் மறுசீரமைக்கப்பட்ட அச்சு இயந்திரங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள்



Products for the press room
- Printing Plates
- Press room chemicals
- Printing inks
- Blankets/Jackets

எமது அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் விற்பனைக்கு பிந்திய சேவை வழங்கப்படும்

இலங்கையில் மிகப்பெரிய கையிருப்பைக் கொண்ட நிறுவனம்
Bhathiya Trading Company
PRIVATE LIMITED
Office 7, Katukurunduwatta Road, Ratmalana, Sri Lanka.
Tel: 622402,622403,729820. Fax:94-1-713625, 074-210781
Factory 7D, Postmasters Place, Mt. Lavinia, Sri Lanka. Tel: 729798
E. mail bhathiya@itmin.com
(C/22933)



அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

- புதிய வர்த்தக உலகிற்குள் உங்களையும் இணைத்துக் கொள்ள...
- மாறி வரும் உலகில் நவீனமடைந்து வரும் பொருட்களை — வழிகளை — சேவைகளை கண்டு களித்து நீங்களும் பயனடைய...
- உங்கள் தேவைகளை குறைந்த செலவில் நிறைவாகப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை அறிந்து கொள்ள...

யாழ் வியாபாரக் கண்காட்சி

தினமும் மாலை 7 மணியில் இருந்து இன்னிசை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்


ஓகஸ்ட்
3ஆம், 4ஆம், 5ஆம்
திகதிகளில்
யாழ் மத்திய கல்லூரியில்

அனுசரணை
புனர்வாழ்வு, மீள் குடியமர்வு மற்றும் அகதிகள் அமைச்சு
உடன் கூட்டாக
வடபகுதி புனர்வாழ்வு, மற்றும் மீள் குடியமர்வு அதிகாரசபை


சிடிசி கன்வென்சன்ஸ் (பிரை) லிமிடட்
தொலைபேசி: 674950-51, தொலைநகல் : 674953, 075-332604
மின் அஞ்சல்: jtf@cdconv.com இணையத்தளம்: www.cdconv.com
(C/23070)

Coca-Cola
நம்பிக்கையான பத்திரிகை உதயன்
அழையுங்கள் 072 233275


கோடிடுக.
சதுரவடிவமான கடதாசியை நான்காக
ந்தி வெட்டி நீக்கப்பட்டுள்ள தோற்றமாகும்.




ல் எவ்வாறு தோற்றமளிக்கும்?



(3) (4)
பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட உருவம் எது?




(2)
(4)




+ (o o) = 192 எனின்

இதன் பெறுமதி யாது?

144 (4) 96
றைந்த பொருள் எது?




C (4) D
நாணயங்கள், 50 சத நாணயம்,
. நான் கையைப் பையிலிட்டு ஒரு
அது
ல்லது 25 சத நாணயம்.
அல்லது 25 சத நாணயம்.
ல்லது நாணயம் ஒன்று.
அல்லது 50 சத நாணயம்.
கண்ணனின் தாய் கோபிகா. கோபிகா
. மீராவின் மகள் நீலாம்பரி எனின்
என்ன உறவுமுறை?
மா (3) பாட்டன் (4) மாமா
ரமும் பருமனில சமனானவை. விருது
விடப் பெரியது. விருது நகரம் சேரன்
. பருமனில் சிறிய நகரம் எது?
(3) பாண்டி (4) சேரன்
நுத்தமான உருவம் யாது?



பகுதி -2
நேரம்:- 1 மணி 15 நிமிடம்
ாசித்து அதன் கீழ் உள்ள வினாக்

'அன்பகம்'
வளர்மதி வீதி
மட்டுவில் தெற்கு
சாவகச்சேரி
25.07.2002

இருக்கிறேன். அதுபோல உங்கள்
உள்ளேன். அப்பா, நான் நன்றாகப்
பாடசாலைக்கு சென்று வருகின்றேன்.
ல் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப்
க எனக்குண்டு. அப்பா, நான் பரீட்சை
கதத் துவிச்சக்கரவண்டி ஒன்று வாங்கித்
தங்கிவிட்டதால் அதிகம் எழுத முடிய
தும் நீண்ட கடிதம் எழுதுகின்றேன்.
எப்ப வருவீர்கள்? இப்படிக்கு
அன்பு மகன்
பா. அருணிதன்
தில் வரவேண்டிய குறியீடுகளைக்
ளேள் இடுக.
க்கு எழுதப்பட்டது?

பாலில் அனுப்புவதாயின் ஒட்டப்பட
ன் பெறுமதி யாது?
ரூபா ........... சதம்
பாலில் அனுப்புவதாயின் ஒட்டப்பட
பெறுமதி யாது? ..........................
குறிக்கும் கருத்து யாது?

தச் சென்று ரூபா 2.00 பெறுமதியுள்ள
4.50 பெறுமதியான 4 முத்திரைகளை

யும், ரூபா 10.00 பெறுமதியுள்ள 6 முத்திரைகளையும் வாங்கினான். எனவே அவன் வாங்கிய முத்திரைகளின் மொத்தப் பெறுமதி யாது? ................ ரூபா ............... சதம்

07. அவன் அவற்றை வாங்கி 200 ரூபாத் தாள்க்காசு ஒன்றைக் கொடுத்தால் அவனுக்குக் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு? ................ ரூபா ............... சதம்

★ **கீழ்வரும் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை எழுதுக.**

08. (i) அப்பா .......................... (ii) நான் ..........................

09. பாடசாலை .......................... 10. மகன் ..........................

★ **கீழ்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களைக் கடிதத்தில் இருந்து எழுதுக.**

11. ROAD .......................... 12. YOUR ..........................

13. GRADE .......................... 14. LETTER ..........................

★ **"அ" பகுதிக்குரிய விடைகளை "ஆ" பகுதியில் இருந்து தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.**

| அ | | ஆ |
|---|---|---|
| 15. கண்டி | ( ) | 1. வடமாகாணம் |
| 16. காலி | ( ) | 2. மேல்மாகாணம் |
| 17. கொழும்பு | ( ) | 3. கிழக்கு மாகாணம் |
| 18. திருகோணமலை | ( ) | 4. தென் மாகாணம் |
| 19. யாழ்ப்பாணம் | ( ) | 5. மத்திய மாகாணம் |

★ **சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடைப்பிற்குள் எழுதுக.**

20. ஒரு துணியின் ஓரத்தை மடித்துத் தைப்பதற்கு சங்கிலித் தையல் பயன்படுகின்றது. ( )

21. வயலின் ஒரு தோற்கருவி ஆகும். ( )

22. தேனீ பயிர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத பிராணியாகும். ( )

23. 'றெஜிபோம்' நீரில் மிதக்கும் ( )

24. பெற்றோலை விட விரைவாக மண்ணெண்ணெய் ஆவியாகும். ( )

★ **அச்சுப் பதித்தலின் 4 சந்தர்ப்பங்கள் கீழே உள்ளன. எனினும் அவை சரியான ஒழுங்கில் இல்லை. அவை ஒழுங்காக இருப்பதற்கு எதிரேயுள்ள அடைப்புக்குறிக்குள் 1,2,3,4 ஆகிய எண்களை இடுக.**

25. ☆ செய்த அச்சில் சாயம் இட்டு வெள்ளைக் கடதாசி மீது வைத்து அழுத்துக. (............)
☆ மென் பலகைத் துண்டை எடுக்கவும். (............)
☆ தட்டையான மேற்பரப்பிலே அச்சு ஒன்றை வெட்டுக. (............)
☆ அதன் ஒரு பக்கத்தில் தட்டையான மேற்பரப்பைச் செய்க. (............)

★ **கீழ்வரும் பாடலை வாசித்துக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

"தலைவாரிப் பூச்சூடி உன்னைப் பாட
சாலைக்குப் போ என்று சொன்னார் உன் அன்னை!
சிலை போல ஏனங்கு நின்றாய் - நீ
சிந்தாத கண்ணீரை ஏன் சிந்துகின்றாய்?

26. இப்பாடல் ஓர் ஆண் பிள்ளையை நோக்கியா அல்லது பெண் பிள்ளையை நோக்கியா பாடப்படுகின்றது? ..........................

27. பாடசாலைக்குச் செல்ல விரும்பாத பிள்ளை நின்ற காட்சி எதற்கு ஒப்பாகும்? ..........................

28. பாடசாலை செல்வதற்குப் பிள்ளையை ஆயத்தப்படுத்தியவர் யார்? ..........................

29. பாடலில் உள்ள முன்னிலைப் பெயர்ச்சொல் யாது? ..........................

30. பாடலில் உள்ள முன்னிலை வினைச் சொல் யாது? ..........................

31. பாடலில் உள்ள வினாச்சொல் யாது? ..........................

32. பாடலில் உள்ள சினைப் பெயர் யாது? ..........................

★ **எதிர்க்கருத்துள்ள சொல் எழுதுக.**

33. போ .......................... 34. உன்னை ..........................

★ **ஒத்த கருத்துள்ள சொல் எழுதுக.**

35. தலை .......................... 36. கண் ..........................

★ **பன்மைச் சொல் எழுதுக.**

37. அன்னை .......................... 38. பூ ..........................

39. நீ .......................... 40. பாடசாலைக்கு ..........................

★ **பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை சிறிய ஆங்கில எழுத்துக்களில் (Small letters) எழுதுக.**

41. தலை .......................... 42. பூ ..........................

43. கண் .......................... 44. நீ ..........................

★ **சிக்னல் பற்பசைக்குரிய விளம்பரம் கீழே தரப்பட்டுள்ளது.**

> உங்கள் பற்கள் பிரகாசமாக இருக்க
> உங்கள் வாய் நறுமணத்துடன் இருக்க
> உங்கள் வாழ்வு வளமாய் இருக்க
> "சிக்னல்" பற்பசையைப் பாவியுங்கள்

இதனைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

45. மேலே குறிப்பிட்ட விளம்பரங்களை அறிய உதவும் விளம்பர சாதனங்கள் மூன்று எழுதுக.
1. .......................... 2. .......................... 3. ..........................

46. பற்கள் பிரகாசம் அடைய என்ன செய்ய வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது? ..........................

47. சிறுவரில் காணப்படும் 20 பற்களை எவ்வாறு அழைப்பர்? ..........................

48. வளர்ந்தோருக்குப் பொதுவாக எத்தனை பற்கள் காணப்படும்? ..........................

49. நீ காணும் "சிக்னல்" பெட்டி எவ்வகைத் திண்ம வடிவம்? ..........................

50. அதற்கு உச்சிகள் எத்தனை? ..........................
விளிம்புகள் எத்தனை? ..........................


51. பற்களினால் நாம் பெறும் முக்கிய பயன் யாது? ..........................

52. ஒரு சிக்னல் பெட்டியின் நிறை 175 கிராம் ஆகும். அவ்வாறான 14 சிக்னல் பெட்டிகளின் மொத்த நிறை யாது? ..........kg..........g

53. ஒரு சிக்னல் பெட்டியின் விலை ரூபா 47.50 ஆகும். இரண்டு சிக்னல் பெட்டிகளை வாங்கி, ரூபா 100ஐக் கடைக்காரரிடம் கொடுத்தால் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு? ..................ரூபா ..................சதம்


★ **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

54.




இப்பரிசோதனை எதனை அறியச் செய்யப்பட்டது?
(1) மண்ணில் வளியுண்டு
(2) நீரில் மண் உண்டு
(3) மண்ணில் நீர் உண்டு.

55.




இப்பரிசோதனை எதனைக் காட்டுவதற்குச் செய்யப்பட்டது?
(1) மண்ணில் வளி உண்டு.
(2) மண்ணில் நீர் உண்டு.
(3) நீரில் வளி உண்டு.

★ **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

56. ஸ, ரி, க, ம, ப, த, நி என்பன சங்கீதத்தில்
(1) ஏழு எழுத்துக்கள் (2) ஏழு சுரங்கள் (3) ஏழு தாளங்கள்

57. நாட்டார் பாடல்கள் எதனுடன் தொடர்புபட்டவை?
(1) கிராமத்துடன் (2) நாட்டுடன் (3) நடனத்துடன்

58. உணர்ச்சிகளைச் சரியாக வெளிப்படுத்த உதவும் மனித உறுப்பு.
(1) கை (2) முகம் (3) வாய்


59. நிறக்கடதாசிகளைக் கிழித்து ஒட்டும் ஆக்கம்
(1) கிறுக்கல் (2) பற்றிக் ஆக்கம் (3) கொலாஜ்

60. வானவில்லைக் காட்டப் பயன்படும் இரேகை
(1) சமாந்தர இரேகை (2) சுருள் இரேகை (3) வளைவு இரேகை

★ **கீழ்வரும் அமைப்பானது கத்தி ஒன்றை முழுமையாக்கும் பல்வேறு படி முறைகளைக் கொண்டு அமைந்துள்ளது. அதன் சில படிமுறைகள் வெற்றிடமாகத் தரப்பட்டுள்ளன. வெற்றிடத்தில் வரவேண்டிய செயன்முறையை அதன் கீழ் அடைப்புக்குள் தரப்பட்ட விடைகளில் இருந்து தெரிந்து எழுதுக.**

கம்மாலை சுத்தியல் அரம்
இரும்பு → [ (61) ] → [ (62) ] → [ (63) ] → கத்தி
மரத்துண்டு → [ (64) ] → பிடியை இறுக்குதல் →
உளி, வாள். சீவுளி
(உலையிடல், கூராக்குதல், பிடிசெய்தல், தட்டுதல்)

★ **கீழுள்ள வரை படம் ஒரு மொத்த விற்பனைக் கடையில் விற்பனைக்குள்ள பொருள்களின் பங்கினைக் குறித்துக் காட்டுகிறது. இதனை அவதானித்து விளங்கி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**




65. இக்கடையில் 75 மூடைகள் அரிசி உள்ளதாயின் கடையிலுள்ள அனைத்துப் பொருள்களும் எத்தனை மூடைகளாகும்? ..........................

66. இக்கடையில் எந்த இரு பொருள்களைச் சேர்த்தால் அரிசி மூடைக்குச் சமனாகும்? ..........................

67. இங்குள்ள ஒவ்வொரு மூடையும் 35kg நிறையுடையவை. சுடின் சம அளவில் காணப்படும் இரு பொருள்களினதும் மொத்த நிறை யாது? ..........................kg

68. பருப்பு மூடைகளின் எண்ணிக்கை முழுப் பொருள்களின் என்ன பங்கு என்பதைப் பின்னத்தில் எழுதுக? ..........................

★ **நாதன் கடையில் வாங்கிய பொருள்களின் சிட்டை விவரம் கீழே உள்ளது. அவ்விவரத்தைக் கொண்டு அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

| பொருள் | அளவு | விலை |
|---|---|---|
| மா | 3kg | 63.00 |
| அரிசி | 2 1/2kg | 75.00 |
| சீனி | 750g | 22.50 |
| பருப்பு | 500g | 25.50 |

69. ஒரு கிலோகிராம் அரிசியின் விலை யாது? ...............ரூபா ...............சதம்

70. சீனி 1 1/2 கிலோகிராமும், பருப்பு 750 கிராமும் வாங்க எவ்வளவு பணம் வேண்டும்? ...............ரூபா ...............சதம்

71. நாதன் மேலுள்ள அட்டவணையில் உள்ள பொருள்களை வாங்கிக்கொண்டு 200 ரூபாத் தாள் ஒன்றைக் கொடுத்தால் மீதியாக எவ்வளவு கிடைக்கும். ...............ரூபா ...............சதம்

72. 100g பருப்பின் விலை யாது? ...............ரூபா ...............சதம்

73. 2kg அரிசியும் 150g சீனியும், 250g பருப்பும் வாங்க எவ்வளவு பணம் வேண்டும்? ...............ரூபா ...............சதம்

★ **நான் வீட்டில் வளர்க்கப்படும் ஒரு பசு...... என்னும் தலைப்பில் சரியான எழுவாய், பயனிலைகளுடன் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒரு வாக்கியத்தில் நான்கு சொற்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்.**

74. ..........................
75. ..........................
76. ..........................
77. ..........................
78. ..........................
79. ..........................

தயாரிப்பு:
**திரு. வே. அன்பழகன் (ஆசிரியர்)**

## ஊர்காவற்றுறை பிரதேச சபை அறிவித்தல்
## சின்னமடு மாதா தேவாலய வருடாந்த பெருநாள்

சின்னமடு மாதா தேவாலய வருடாந்த பெருநாள் 27.07.2002 முதல் ஆரம்பமாகி 05.08.2002ஆம் திகதிவரை நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இக்காலப் பகுதியில் ஆலய வீதியிலும், வெளிச் சுற்றாடல்களிலும் தற்காலிக வியாபார நிலையங்களை அமைத்து வியாபாரம் செய்வோர் ஊர்காவற்றுறை பிரதேச சபையில் தொடர்புகொண்டு அனுமதிப்பத்திரம் பெற்று [illegible]துச் சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியுடன் வியாபாரத்தில் ஈடுப[illegible]வண்டும் என்பதை அறியத்தருகின்றேன்.

நா.திருச்செல்வம்
உபதலைவர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

*பிரதேச சபை,*
*ஊர்காவற்றுறை*

(C/23095)

## 90ஆம் [illegible]ள் நினைவலைகள்



மலர்வு 07 - 01 - 1982

உதிர்வு 01 - 05 - 2002

### செல்வன் கந்தசாமி தினேஷ் (தீபன்)

எம்முயிர் தீபனே! நீயுதிர்த்திய அமுதமொழி
என்றென்றும் இதயத்து இடையறா தொலிக்குதையா
வையத்துள் வாழ்வாங்கு வாழ எண்ணினாயே
வானிடிபோல் கானகத்தில் கதியற்று சென்றாயோ?
கனடா சென்றிடவோ அவ்வழியில்
காலனவன் காவல் இருந்தானோ?
எமைவிட்டு நீங்கி மூன்றுதிங்கள் கழிந்தாலும்
எம் கண்கள் ஓயவில்லை உன்நினைவு ஆறாதே.

*அரசடி வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.*

ஆ.கந்தசாமி குடும்பத்தினர்.

(6466)

## நஷ்டஈட்டு காசோலையை மாற்றச் சிரமம்

தென்மராட்சி,ஜுலை29

யுத்த அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட சாவகச்சேரி நகர வர்த்தகர்களுக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் வழங்கப்பட்ட காசோலைகளை பணமாக மாற்றிக் கொள்ள வர்த்தகர்கள் இன்னமும் சிரமப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் காசோலைகளுக்கான கொடுப்பனவுகளைப் பெற்றுக்தருமாறு வர்த்தகர்கள் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தை மகஜர் மூலம் கோரியுள்ளனர்.

புனர்வாழ்வு அமைச்சினால் காசோலை வழங்கப்பட்ட வர்த்தகர்களில் இதுவரை ஏழு பேரின் காசோலைகளுக்குரிய 3லட்சத்து 25 ஆயிரம் ரூபா வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-117)

## முதலாம் ஆண்டு நீங்காத நினைவுச்சுடர்

அன்னை மடியில் 1932 - 10 - 04



ஆண்டவன் அடியில் 2001 - 08 - 09

### அமரர் நாகமுத்து சிங்கராசா

*அன்புடன் வாழ்ந்து எமக்கு ஆதாரவாய் இருந்தீர்!*
*பண்புடன் பழகி பாரோர் போற்ற வாழ்ந்தீர்!*
*இன்றுடன் ஓராண்டு ஆனதே நீங்கள் மறைந்து.*
*இதயத்தில் உங்கள் நினைவு என்றும் நிலைத்திருக்கும்.*

*பெரியமதவடி, அளவெட்டி தெற்கு,*
*அளவெட்டி.*

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(6346)




## 50ஆவது அகவையில் வளரட்டும் அறுவடைப்பணி

29-07-2002

### Rev.M.M.இன்பரூபன்

அன்பு கொண்ட இன்பா அண்ணா
ஆறுதல் செய்யும் இன்பாப் போதகர்
இன்பமான மொழி பேசும் அன்பு நண்பர்
ஈவுகாட்டும் இரக்கமுள்ளவர்
உவகையால் நிரப்பும் உண்மையானவர்
ஊதாரிகளைத் திருத்தும் ஊழியர்
எழுப்புதலை வித்திடும் வித்தகர்
ஏணிப்படியாகி ஏற்றிவிடும் சிற்பாசாரி
ஐயமின்றிக் கற்றிடப் பண்ணும் நல்ல ஆசான்
ஒற்றுமை வளர ஓயாமல் உழைப்பவர்
ஓடி உழைத்து ஆத்துமா சேர்ப்பவர்
ஔடதமாகி அவனியிலே என்றும் நீவிர்
வல்லமையோடு வாழ வாழ்த்துகிறோம்!

*சீயோன் தேவாலயம்,*
*யாழ்ப்பாணம்.*

சீயோனின்
அன்புச் செல்வங்கள்.

(6454)

ஜனசக்தியின் புதிய கிளை யாழ்ப்பாணத்தில் திறக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் மிக வேகமாக வளர்ச்சிகாணும் காப்புறுதி நிறுவனமான "ஜனசக்தி காப்புறுதி" தனது புதிய கிளையை யாழ்ப்பாணத்தில் திறந்து வைப்பதில் பெருமைப்படுகின்றது.

பிரதேச மக்களின் வாழ்க்கையில் ஒளியேற்றி, சமாதானமும் சுபீட்சமும் நிறைந்த புதிய யுகத்திற்கு அழைத்துச்செல்ல ஜனசக்தியின் நிபுணத்துவமும் அனுபவமும் வழி வகுக்கும்.

JANASHAKTHI
INSURANCE




(C/23061)

# வாழ்க்கைச்செலவுப் பிரச்சினையூடாகத் தலைதூக்க எதிரணிகள் முயற்சி

## 1953 ஓகஸ்ட் 12 ஹர்த்தாலை நினைவுபடுத்தத் திட்டம்

பொருளாதார விவகாரத்தை மட்டும் முதன்மைப்படுத்தி விளக்கி நாட்டின் பிரதமர் ஒருவர் நாட்டு மக்களுக்கு உரையாற்றியமை இதுவே முதற்றடவையாக இருக்கும்.

வாழ்க்கைச் செலவுப் பிரச்சினை முனைப்புப்பெற்று மோசமான ஒன்றாக அது தலைவிரித்தாடத் தொடங்கும் வேளையிலேயே அதன் தலையில் அடித்து அதனை அடக்கிவிட முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது. எதிரி தாக்குதவற்குத் தயாராகிவரும் வேளையிலேயே அவனை வலிந்து தாக்கி அழிக்கும் ஒரு யுத்த முறை போல இது நடந்திருக்கிறது.

மக்கள் சக்தியைத் தம்பக்கம் அணிதிரட்டுவதற்கு எதிர்க்கட்சிகள் தம்கையில் வைத்திருந்த இறுதி ஆயுதத்தையும் தட்டிப்பறித்தது போன்ற செயலாகவும் இது இருக்கிறது.

சமாதான வேலைத் திட்டத்தைக் குழப்பிவிடும் முயற்சிகளை எதிர்க்கட்சிகள் ஆரம்பத்திலிருந்தே எடுத்து வந்துள்ளன. ஐதேமு அரசாங்கம் அமைந்ததுமே ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரங்களை ஆயுதமாகப் பயன்படுத்த முன்வந்தார்.

புதிய அரசாங்கம் தன்னைப் புறக்கணித்துவிட்டு புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் புலிகளுடன் செய்ததாகக் குறிப்பிட்டார். வேறுவழிகளிலும் ஒத்துழைக்காத போக்கில் செயற்பட்டார். நிபந்தனைகள் பலவற்றை முன்வைத்தார்.

தனது தகுதிகாண்.அரசின் பங்காளியான ஜே.வி.பியைத் தட்டிக்கொடுத்து இனவாத பிரசாரத்தை முதன்மைப்படுத்த உதவினார். தனது கட்சியினரையும் ஜே.வி.பியுடன் இணைந்து செயற்பட அனுமதித்தார்.

### இனவாதக் கோரிக்கை

பௌத்த மதகுருமார் தூண்டிவிடப்பட்டனர். அவர்கள் ஒவ்வொரு தடவையும் ஒவ்வொன்றாக இனவாதக் கோரிக்கைகளை அடுத்தடுத்து வெளியிட்டு சமாதான திட்டத்திற்கு நெருக்குதல் கொடுத்தனர்.

கிழக்கில் இனக்கலவரங்கள் தூண்டிவிடப்பட்டு அதன்மூலம் சமாதான முன்னெடுப்புக்கள் குழம்பும் நிலை தோற்றுவிக்கப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் உடைந்துவிடுமோ என்று அஞ்சும் நிலை தோன்றியது.

ஆனால், இவை யாவுமே கிரமமான முறையில் சாணக்கியமாகச் சமாளிக்கப்பட்டன. எதிர்க்கட்சிகள் ஒவ்வொன்றாகத் தூக்கிய ஆயுதங்கள் ஒவ்வொன்றாக வலுவிழக்கச் செய்யப்பட்டன. இறுதியில் பரந்த மக்களே கிளர்ந்தெழக்கூடியதான கோரிக்கையை எதிர்க்கட்சிகள் கையில் எடுத்தன.

வாழ்க்கைச் செலவு உயர்வதற்கெதிரான போராட்டம் பொ.ஐ.முவினால் முன்வைக்கப்பட்டது. உண்மையில் இதுவேதான் போராட்டத்தின் முற்றுமுழுதான நோக்கமல்ல. ஆனால, இது இன, மத பேதங்களுக்கு அப்பால் அனைத்து மக்களையும் ஒன்று திரட்டும் சக்திவாய்ந்த சுலோகம். கிளர்ந்தெழ வைக்கக்கூடியது. தக்க தருணத்தில் தக்க ஆயுதம் இதுவே என்று பொ.ஐ.மு. இறுதியில் நம்பியது.

1953ஆம் ஆண்டு ஓகஸ்ட் 12ஆம் திகதி அன்றைய அமைச்சரவையை துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த பிரிட்டிஷ் கப்பலில் அடைக்கலம் தேடவைத்த வரலாற்றுப் புகழ் வாய்ந்த ஹர்த்தால் நடந்தது.

இந்த வருடம் அதே தினத்தில் அரசுக்கு எதிராகப் பிரசாரத்தை உச்ச அளவுக்கு உயர்த்தும் திட்டங்களை எதிர்க்கட்சித் தலைவர் வைத்திருந்தார்.

ஆனால், ரணிலின் அமைச்சரவையின் அதிரடி நடவடிக்கையினால் எதிர்க்கட்சிகள் இறுதியில் தாம் தயாரித்து வைத்திருந்த ஆயுதத்தையும் இழந்தவர்களாக வெறுங்கையர்களாக ஆகியுள்ளனர்.

பொருள்களின் விலைகளை அதிகரிக்கச் செய்து, பின்னர் ஊழியர்களின் சம்பளங்களையும் ஓரளவு அதிகரித்து அதன்மூலம் ஒரு நற்பெயரையும் தட்டிக்கொள்ளும் பழைய முறையும் கைவிடப்பட்டுள்ளது.

விலை அதிகரிப்பைத் தூண்டக்கூடிய எரிபொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்தி அரச ஊழியர்களில்லாத தரப்பினரும் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கும் முறையில் அரசு முயற்சியெடுத்திருக்கிறது.

### விலைகள் அதிகரிப்பு

பாவனைப் பொருள்களின் விலைகளை அடிக்கடி மாற்றக்கூடிய அல்லது உயர்த்தக்கூடிய பொருள்களான எரிபொருள் மற்றும் நாணயம் போன்றவற்றின் பெறுமதி சர்வதேச காரணிகளால் அடிக்கடி மாறிக்கொண்டிருப்பது உள்நாட்டில் பொருள்களின் விலைகள் அதிகரிப்புக்குக் காரணமாகவுள்ளது.

இதனை உணர்ந்த அரசாங்கம், எரிபொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்தியுள்ளது. இலங்கை நாணயமும சர்வதேச நாணயத்துடன் நேரடியாக பிணைக்கப்பட்டிருக்கும் நிலையும் மாறவேண்டும். ஒரு நிலையான பெறுமதியில் இலங்கை ரூபா வைக்கப்படவேண்டும். அதன்பின்னரே பொருள்களின் விலைகள் அடிக்கடி மாறாது. குறைந்தபட்சம் இரண்டு வரவு - செலவுத்திட்டங்களுக்கு இடைப்பட்ட காலத்திலாவது பொருள்களின் விலைகள் உயராமல் பார்த்துக்கொள்ளலாம்.

எரிபொருள், மின்சாரம், மருந்து போன்றவற்றின் விலைக்குறைப்பினால் அத்தியாவசிய பொருள்களின் விலைகள் குறைவடைய 3,300வரை உயர்ந்துள்ள வாழ்க்கைச் சுட்டெண் இப்போதுள்ளதிலிருந்து சில புள்ளிகளாவது குறைவடையலாம்.

இதுவரலாற்றுச் சாதனையாகவும் இருக்கும். ஆனால், விலை குறைப்புக்களை உறுதிசெய்யும் நடவடிக்கைகள் தேவை.

சமையல் வாயுவின் விலை குறைக்கப்படவில்லை. ஆனால், குறைந்த விலையில் விற்கப்படும் வாயுவைக் கொள்வனவு செய்வதற்கு இலகு தவணையில் அல்லது குறைந்த விலையில் பெறக்கூடிய சிலிண்டர் வேண்டுமே! அதற்கு ஏற்பாடு இல்லையாயின் 500 ரூபாவுக்கு விற்கும் வாயுவை மக்கள் தொடர்ந்து வாங்கவேண்டியிருக்கும்.

நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை விற்றுவிடுவது என்னும் வியாபாரக் கண்ணோட்டத்திலான தீர்மானம் கிழக்கிலங்கை காகிதக் கூட்டுத்தாபனம் போன்றவற்றை மூடிவிடலாம். வேலையின்மை பிரச்சினை அதிகரிக்கலாம். ஊழியர்களும் பாதிக்கப்படலாம். இது தனியான பிரச்சினை.

### தடுமாற்றமான நிலை

நிதியமைச்சினால் நிதி நடவடிக்கைகள் தடுமாற்றமாக எடுக்கப்பட்டிருக்கின்றன. அதாவது வரவு - செலவுத்திட்டத்தில் பொருள்கள் சேவைகள் வரியும் தேசிய பாதுகாப்பு அறவீடும் நீக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டது.

முதலில் ஜூன் முதலாம் திகதியிலிருந்து என்றும், பின்பு ஜூலை முதலாம் திகதியிலிருந்து என்றும், இறுதியில் ஓகஸ்ட் முதலாம் திகதியிலிருந்தென்றும் வற்வரி அமுலாகும் திகதிகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன.

ஜூன் மாதத்தில் எரிபொருள்களின் விலைகளை அதிகரிக்க அரசாங்கம் அனுமதி வழங்கியது. அதனைத் தொடர்ந்து போக்குவரத்துக் கட்டணங்களின் அதிகரிப்பும் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அத்தனை பொருள்களின் விலைகளும் அதிகரித்தன.

இதன்பின்னர் அரசாங்கம் திடீரென எரிபொருள்களின் விலைகளைக் குறைப்பதென அறிவித்தது. எரிபொருள் விலை அதிகரிப்பு தவிர்க்க முடியாதது என்பதை நியாயப்படுத்துவதற்கு அரசாங்கம் பெருமுயற்சி எடுத்தது போலவே வாழ்க்கைச் செலவு உயர்வுக்கு முகம் கொடுப்பதற்கும் பெரும் முயற்சி எடுக்கவேண்டியிருந்தது.

இறுதியில் அத்தியாவசியப் பொருள்களினதும் பஸ் கட்டணங்களினதும் விலைகள் குறையும் என்று போதனை செய்ய ஆரம்பித்திருக்கிறது.

எரிபொருள்களின் விலை ஓரிரு ரூபாவினால் அதிகரித்ததுடன் பஸ் கட்டணங்கள் 15 சதவீதத்தினால் அதிகரித்தன. டீசல் எண்ணெய் மூன்று ரூபாவினால் குறைக்கப்பட்ட பின்னர் கட்டணங்களை குறைப்பதற்கு போக்குவரத்து நிறுவன உரிமையாளர்கள் பின்னடிக்கின்றனர். 2.25 சதவீதம் குறைப்பது பற்றி ஆலோசிக்கின்றார்களாம்.

பாண், பணிஸ் விலைகளைப் பெப்ரவரியில்தானே குறைத்தோம்.

**யாழ்.மைந்தன்**

இப்பொழுது 6.5 சதவீதம் மாவின் விலை குறைகிறது என்பதற்காக இன்னுமொரு தடவை குறைப்பது சாத்தியமில்லை என்று பாண் உற்பத்தியாளர் சங்கத்தினர் தெரிவித்திருக்கின்றார்கள்.

### பஸ் கட்டணம்

முன்பு எரிபொருள்களின் விலைகள் பல தடவைகள் அதிகரிக்கப்பட்டபோது நாம் பஸ் கட்டணங்களை அதிகரிக்கவில்லையே! இப்போது எதற்காகக் குறைக்கவேண்டும்? என போக்குவரத்து கம்பனியொன்றின் தலைவர் கேட்கிறார். அவ்வாறாயின் காய்கறிகளின் விலைகள்கூட குறையப்போவதில்லை.

மொத்தத்தில் வர்த்தகர்களின் கைகளில் அகப்பட்டுக்கொண்ட இலாபத்தை மீட்டு எடுப்பதென்பது முதலையின் வாயிலிருந்து தவளையை மீட்டெடுப்பது போன்றதே.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் என்றும், நடவடிக்கைகள் என்றும் அமைச்சர்கள் அறிக்கைகள் வெளியிடுவதால் பொருள்களின் விலைகள் குறையப்போவதில்லை.

50 சதம், 25சதம் போன்ற விலைக்குறைப்புகளால் நுகர்வோர் பயனடையப் போவதுமில்லை. வர்த்தகர்களுக்கும் முதலாளிகளுக்கும் இலாபம் சேர்க்கும் முயற்சியே நடைபெற்றிருக்கின்றது.

அரசாங்கத்திற்கெதிராகக் கிளம்பிவரும் எதிர்ப்புகளை பிரதமர் மிகுந்த சாணக்கியத்துடன் முறியடிக்கும் திட்டங்களை வகுத்தாலும் நாட்டு மக்களுக்கு அனுகூலங்கள் கிடைக்கும் நிலை நடைமுறையில் இல்லை. சமாதான முன்னெடுப்புகள் அடிக்கடி கடற்படையினரால் தடங்கலுக்குள்ளாவது போன்று ஏனைய திட்டங்களும் குறிப்பிட்ட கட்டங்களில் தடைகளையும உட்சதிகளையும் சந்திக்கின்றனவா?

### எதிர்க்கட்சிகள் தெம்பு

இதனால் எதிர்க்கட்சிகள் தெம்பு அடைந்துள்ளன. அநுராதபுரத்தில் கட்சித் தொண்டர்கள் மத்தியில் உரையாற்றிய ஜனாதிபதி நாட்டில் சமாதானம் இல்லை. ஒற்றுமையும் இல்லை. ஏர்வர நெருக்கடிகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. அதனால் முன்னோக்கி வந்துகொண்டிருக்கும் சவால்களை எதிர்கொள்வதற்கு பொ.ஐ.மு. தொண்டர்கள் தயாராக வேண்டும் என்று தூபம் போட்டிருக்கிறார்.

பெற்றோலியப் பொருள்களின் விலைகளை அதிகரிப்பதற்கான அனுமதியையும் போக்குவரத்துக் கட்டணங்களின் அதிகரிப்புக்கான அனுமதியையும் முதலில் கொடுத்துவிட்டு வர்த்தகர்கள் பொருள்களின் விலைகளை அதிகரித்த பின் 'மயிலே மயிலே இறகு போடு' என்று பின்னே திரிவது மக்களைச் சோதனைக்குள்ளாக்குவதாகும்.

விலைக் குறைப்புக்களை நடைமுறைப்படுத்த செயல்முறைமை ஒன்று வகுக்கப்படுதல் வேண்டும்.

பொருள்கள் சேவைகள் வரியை அகற்றியும் வற்வரியை அறிமுகம் செய்தும் தேசியப் பாதுகாப்பு அறவீட்டிலிருந்து விலக்களித்தும் அவற்றினால் மக்கள் பயனடையாமற் போனால் என்ன பயன்?

*நன்றி சுடர் ஒளி*



தீவகக் கல்வி வலய நிர்வாக உத்தியோகத்தர் செல்லையா மெற்றாஸ்மயில் எழுதிய "மரபுவழி இசைநாடகங்கள் ஒன்பது" என்ற இசைநாடகத் தொகுப்பு நூலின் அறிமுக விழா அண்மையில் வவுனியா சுத்தானந்த இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வவுனியா கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கே.பேணாட் உரை நிகழ்த்துவதை முதலாவது படத்திலும் - நூலின் பிரதி ஒன்றை வவுனியா மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கத்திடம் இருந்து வர்த்தகர் பி.கனேசரத்தினம் பெறுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். வவுனியா பிரதேச செயலர் திருமதி இமல்டா சுகுமார், விழாத் தலைவர் தமிழ்மணி அகளங்கன் மற்றும் நூலாசிரியர் ஆகியோரும் படங்களில் காணப்படுகின்றனர். (எ)

# வீதி விபத்துக்களைத் தடுக்க அனைவரது ஒத்துழைப்பும் தேவை

யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரையில் வாகன வீதி விபத்துக்கள் அதிகரித்த ஒரு காலம் கடந்து - மிக மோசமான நிலை அடைந்து, தற்போது படுமோசமாக ஆகியிருக்கிறது. ஏனெனில், நாளாந்தம் படுகாயமடைபவர்கள், மரணமடைபவர்களின எண்ணிக்கையைப் பார்க்கின்றபோது இதன் உண்மையும், கனாகனமும் புரியும்.




### ஒத்துழைப்பு அவசியம்

வீதி விபத்துக்களால் அதிக மரணங்கள் ஏற்படாதிருக்க அல்லது தவிர்த்துக்கொள்ள வாகன ஓட்டுநர்கள், பொதுமக்கள், பல மட்டத்திலான அரச அதிகாரிகள் போன்றோரின் ஒத்துழைப்பு இன்றியமையாததும், அத்தியாவசியமானதுமாகும்.

முதன்முதலில், வாகன ஓட்டுநர்கள் வீதி ஒழுங்குகளை மதித்து நடக்கவேண்டும். குறிப்பாக, மக்கள் கூடும் இடங்களில், நகரப் பகுதிகளிலும் வாகனங்கள் வேகமாகச் செலுத்துதலைத் தவிர்க்கவேண்டும். புதிதாக வாகனங்களைச் செலுத்துபவர்கள் இவ்விடயத்தில் கவனமாய் இருக்கவேண்டும் போட்டி போட்டுக் கொண்டோ அல்லது 'கண்மண்' தெரியாமல் செலுத்துபவர்கள் இனிமேலாவது மற்றவர்களின் உயிர்களின் மட்டில் கருணை கொள்வார்களா?

### விபத்துக்கான காரணங்கள்

அடுத்தது, வீதி விபத்து நடைபெறும்போது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வாகன செலுத்துநரில்தான் தவறுண்டு என்று கொள்ளமுடியாது. இவ்விடயத்தில் பாதசாரிகள், துவிச்சக்கர வண்டிகளில் செல்வோர் வீதி ஒழுங்குகளை கருத்திற்கொண்டு செயற்படவேண்டும். குறிப்பாக, 3,4 பேர் சமாந்தரமாக சவாரி செய்வதால் பாடசாலை மாணவர்கள் உட்பட பலர் வீதி விபத்துக்களைச் சந்திக்கிறார்கள்.

யாழ்.குடாநாட்டில் என்றுமில்லாதவாறு வாகனங்களின் எண்ணிக்கை திடீரென உயர்ந்திருப்பதால், வீதி ஒழுங்கு, எச்சரிக்கை, சைகைத் தகடுகளை உடனடியாக உரிய - தேவையான இடங்களில் பொருத்துவது பல ஆபத்துகளைக் குறைக்கும்.

மற்றையது, வாகனங்களை நிறுத்துவதற்கு (குறிப்பாக நகரப் பகுதியில்) பாதுகாப்பான, வசதியான புதிய இடங்களை ஏற்படுத்துதல் போக்குவரத்து நடைமுறையில் பல நன்மைகளைக் கொண்டுவரும். ஒடுக்கமான வீதிகளில் முக்கியமான ஒரு சிலவற்றையாவது பெரிப்பிப்பது பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எதிர்காலத் திட்டங்களை வகுப்பது சிறந்தது. அத்துடன், வெவ்வேறு காரணங்களுக்காகவும், தேவைகளுக்காகவும் கிளறப்படும் வீதிகள் விரைவாக செப்பனிடப்பட வேண்டும். இம்முயற்சிகள் வீதி விபத்துக்களைக் குறைக்க பெரிதும் உதவும்.

### பொலீஸாரின் பங்கு அளப்பரியது

மேலும், வாகனப் போக்குவரத்து ஒழுங்குகளைப் பேணவும் வீதி விபத்துக்களைக் குறைக்கவும் காவல் துறையினரின் (Police) போக்குவரத்துப் பிரிவினரின் பங்களிப்பு மிக முக்கியமானது. தலைக் கவசம் (Helmet) அணியாதவர்களுக்குத் தண்டப் பணம் வாங்குவதனால் வீதி விபத்துக்கள் குறைந்துவிடாது. அல்லது ஆங்காங்கே அவ்வப்போது நின்று வீதிப் போக்குவரத்து ஒழுங்குபடுத்துதல் மட்டும் போதாது. நடைமுறைக்குச் சாத்தியமான போக்குவரத்து ஒழுங்குமுறைகளை வகுத்து துரிதமாக செயற்படுத்த ஆவன செய்ய வேண்டியது காவல்துறையினரின் கடமையும், பொறுப்புமாகும். எல்லோரும் ஒத்துழைத்தால் அநியாயமான அதிக வீதி விபத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

செ.அன்புராசா, ஆசிரியர்,
புனித வேளாங்கண்ணி சிற்றாலயம்,
யாழ்.வைத்தியசாலை.

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் மலேரியா தடுப்பு நடவடிக்கை

கரவெட்டி,ஜூலை29

வடமராட்சி கிழக்குப் பிரிவில் தற்போது மலேரியா நோய் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

மருதங்கேணி, குடத்தனை போன்ற பகுதிகளில் இருந்தே அதிக அளவில் மலேரியா நோயாளர்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு வந்து சேர்வதாகவும் -

இதனால் தற்போது அப்பகுதிகளில் உள்ள மக்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படுவதாகவும் -

நுளம்பு ஒழிப்புப் பணிகள் நடைபெறுவதாகவும் -

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை மலேரியா நோய்ப் பரிசோதகர் எஸ்.ஜேசுனேசன் தெரிவித்தார். (ஒ-70)

# படையினர் எடுத்துச்சென்ற பாடசாலைக் கொட்டகை

உசன் இராமநாதன் மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவு கட்டடத்தில் நிலைகொண்டிருந்த படையினர் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வெளியேறும்போது அங்கிருந்த ஆரம்பப் பிரிவு வகுப்பறை கொட்டகையைப் பிரித்து எடுத்துச்சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த வகுப்பறைத் தொகுதி 1999 ஆம் ஆண்டு அகதிகளுக்கான ஐ.நா. தூது வராலயத்தினரால் வித்தியாலய ஆரம்பப் பிரிவினருக்கென அமைக்கப்பட்டதாகும்.

இச்சம்பவம் தொடர்பாக வித்தியாலய நிர்வாகத்தினரால் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு முறைப்பாடு செய்யப்பட்டதாகவும் -

குழு உறுப்பினர்கள் வந்து பார்வையிட்டு பொருள்களை மீட்டுத் தருவதாகக் கூறியுள்ளதாகவும் -

தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# மீட்கப்படும் வெடிபொருள்களை பொது வீதிகளில் போடாதீர்!

## மீள்குடியமர்வோருக்கு அறிவுறுத்து

தென்மராட்சி,ஜூலை29

மீளக்குடியமரும் மக்கள் தமது காணிகளில் காணப்படும் வெடிக்காத துப்பாக்கி ரவைகள் மற்றும் வெடிபொருள்களை பொது வீதிகளின் போடவேண்டாமென படையினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மீளக்குடியமரும் மக்கள் தமது வீடு, காணி, கிணறு ஆகியவற்றை துப்புரவு செய்யும் வேளைகளில் அங்கு வெடிக்காத நிலையில் துப்பாக்கி ரவைகள் மற்றும் வெடிக்கும் பொருள்களைக் கண்டால் அவற்றினைப் பாதுகாப்பாக எடுத்துச்சென்று அருகில உள்ள படை முகாம்களில் ஒப்படைக்குமாறும் -

அல்லது அது குறித்துப் படையினருக்குத் தெரியப்படுத்துமாறும் -

எக்காரணம் கொண்டும் வீதிகளில குப்பைகளுடன் அவற்றைப் போடவேண்டாமெனவும் -

அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

வீதிகளில் காணப்படும் குப்பைகளை எரிக்கும்போது அவை வெடிப்பதனால் அவ்வழியே செல்லும் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் பாதிப்புக்கு உள்ளாகலாமெனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

# தந்திர தேவமகராஜி யாழ்ப்பாணம் விஜயம்!

யாழ்ப்பாணம்,ஜூலை29

அமெரிக்க நாட்டு இந்து சமயத் துறவி சுவாமிஜி ஸ்ரீமத்தந்திர தேவ மகராஜ் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார். அவர் இன்று காலை 8.30 மணியளவில் இணுவில் இந்துக்கல்லூரியில் இடம்பெறும் சொற்பொழிவு, பஜனை ஆகியவற்றில் பங்குகொள்வார்.

பின்னர் முற்பகல் 10.30மணிக்கு யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் சொற்பொழிவு நிகழ்த்துவதுடன், புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு சுவாமிஜி ஆசி வழங்குவார்.

தொடர்ந்து பிற்பகல் 12.30மணிக்கு கொக்குவில் நாமகள் வித்தியாலயத்தில் இடம்பெறும் சொற்பொழிவு, பஜனை, ஆசிவழங்குதல் ஆகிய நிகழ்வுகளில் அவர் பங்குகொள்வார்.

மாலை 5மணிக்கு சுழிபுரம் செல்லும் சுவாமிஜி, சுழிபுரம் பத்திரகாளி அம்மன் ஆலயத்தில் சொற்பொழிவு நிகழ்த்துவார். (எ)

# நீதிமன்றக் கட்டடப் பணிக்கு முன்னேற்பாட்டு நடவடிக்கை

## உலகவங்கிக் குழு தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை29

யாழ்ப்பாணத்தில் நவீன வசதிகளுடன் கூடிய நீதிமன்றக் கட்டடத் தொகுதியை விரைவில் அமைப்பதற்கான முன்னேற்பாடுகள் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருவதாக உலக வங்கியின் பிரதிநிதிகள் குழு தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்த இக்குழுவினர் நேற்றுக் காலை 10.15 மணியளவில் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றுக்கு விஜயம் செய்து கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்கள். இக்கலந்துரையாடலின்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

யாழ்.மாவட்டத்தில் நீதிமன்றக் கட்டடத் தொகுதியை அமைப்பதற்கு பணி ஒப்பந்தங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் -

தகுதியான ஒப்பந்தகாரர்கள் கிடைத்தவுடன் உடனடியாக கட்டடப் பணிகள் ஆரம்பமாகும் எனவும் -

அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கட்டடத் தொகுதியை அமைப்பதற்கான நிதியை நீதி அமைச்சின் ஊடாக சட்டம், நீதி தொடர்பான மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் ஒதுக்கியுள்ளதாகவும் -

கட்டடத் தொகுதியில் 8 நீதிமன்றங்கள் அமையவுள்ளதாகவும் -

பணிகள் முற்றாகப் பூர்த்தியடையும் வரையும் தேவைப்படுகின்ற நிதியை வழங்குவதற்கு உலக வங்கி தயாராகவுள்ளதாகவும் -

நேற்றைய கலந்துரையாடலில் பிரதிநிதிகள் குழு மேலும் தெரிவித்துள்ளது.

கலந்துரையாடலின் பின்பு இக்குழுவினர் யாழ்.மத்திய கல்லூரி அருகே கட்டடத் தொகுதி அமையவுள்ள காணியை பார்வையிட்டனர்.

இக்கலந்துரையாடலில் யாழ்.மேல் நீதிமன்ற, நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா, யாழ்.நீதிமன்ற, நீதிவான் இ.த.விக்னராஜா, யாழ்.நீதிமன்ற, மேலதிக நீதிவான், திருமதி சரோஜினி இளங்கோவன், சட்டத்தரணிகளான க.கேசவன், செல்வி சாந்தா அபிமன்னசிங்கம், யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஒ-10)

## கூட்டுறவுக்கடை மாசாரில் திறப்பு

வடமராட்சி,ஜூலை29

பளைப் பிரதேசத்திலுள்ள மாசாரில் பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கிளைக் கடையொன்றினை திறந்து வைத்துள்ளது.

இப்பகுதியில் மக்கள் மீளக் குடியேறியதனையடுத்து, தாளையடி - புதுக்காட்டு வீதியில் இக்கடை திறந்து வைக்கப்பட்டுள்ளது. (ஒ-182)

# போராட்டத்தின் அடித்தளம் மக்களே; அவர்களின் பலமே புலிகளின் பலம்!

## ஊர்காவற்றுறையில் இளம்பரிதி உரை

கொக்குவில்,ஜூலை29

போராட்டத்தின் அடித்தளம் மக்கள்தான். மக்கள் பலமாக இருந்தால் தான் புலிகள் பலமாக இருக்கமுடியும.

இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் இளம்பரிதி.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அரச அலுவலர்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமுர்த்திப் பணியாளர்கள் ஆகியோருடனான கலந்துரையாடலின் போதே இளம்பரிதி இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'இன்று ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவிலுள்ள உங்களனைவரையும் சந்திப்பதில் உண்மையிலேயே சந்தோசமடைகின்றேன். நாம் உங்களை வேறுவிதமாகவே சந்திக்க இருந்தோம். ஆனால் முடியவில்லை. நாம் பலத்துடன்தான் வந்திருக்கின்றோம். பலவீனத்துடன் வரவில்லை. நாம் சிறிலங்கா அரசிற்குக் கொடுத்த இராணுவ மற்றும் பொருளாதார நெருக்கடிகள் காரணமாகவே சிறிலங்கா அரசு சமாதானத்திற்கு வந்தது.

வன்னியில் இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிராக நாம் கொடுத்த பலமான அடி, கட்டுநாயக்கா விமானத் தளம் மீதான அதிரடித் தாக்குதல் வெற்றி என்பவற்றால் ஏற்பட்ட இராணுவ மற்றும் பொருளாதார நெருக்கடியே சிறிலங்கா அரசு சமாதானத்திற்கு வரக் காரணமாகும். அமெரிக்காவால்தான் புலிகள் சமாதானத்திற்கு வந்தார்கள் என்று பிரதமர் ரணில் அமெரிக்காவில் கூறியிருப்பது ஆச்சரியத்தைத் தருகின்றது. போராட்டத்தின் அடித்தளம் மக்கள்தான். மக்கள் பலமாக இருந்தால்தான் புலிகள் பலமாக இருப்பார்கள். புலிகள் பலமாக இருந்தால்தான் போராட்டம் வலுப்பெறும். போராட்டத்தை அழிக்கவேண்டுமாயின் புலிகளை அழிக்கவேண்டும். புலிகளை அழிக்கவேண்டுமாயின் மக்களை அழிக்கவேண்டும். மக்களை அழித்த உலக போராட்ட வரலாறுகளே இல்லை.

நாம் யாழ்ப்பாணத்திற்கு வரும்போது எமது தலைவர் சொன்னார் 'நீங்கள் ஆயுதம் ஏதுமில்லாமல் அங்கு செல்கின்றீர்கள். நீங்கள் மக்களுக்கு கவசமாக இருங்கள். மக்கள் உங்களுக்குக் கவசமாக இருப்பார்கள். மக்களின் சமூக, பொருளாதார, கலாசாரத்தை மேம்படுத்துங்கள்' என்றார். அதனை இன்று நாம் உணரமுடிகின்றது.

18 வயதிற்குக் குறைந்தவர்களை நாம் எமது படையில் சேர்க்கின்றோம் என்று 'யுனிசெவ்' கூறுகிறது. இதற்கு அமெரிக்கா பின்னணியில் உள்ளது. எமது இயக்கத்தில் 18 வயதிற்குக் குறைந்தவர்களைச் சேர்க்க வேண்டாம் என்று அன்றே தலைவர் கூறியிருக்கின்றார்.

நாம் வரி அறவிடுகின்றோம் என்று சிலர் கூறுகின்றனர். உலக நாடுகளில் பலவிதமான வரிகள் அறவிடப்படுகின்றன. தேசிய இறைமையுள்ள நாம் விற்பனை வரியை மட்டுமே அறவிடுகின்றோம். அதுவும் மக்களைப் பாதுகாப்பதற்காகவே. எமது நலன்களை விருத்தி செய்ய அல்ல. யாராவது இவ்வரியினால் பாதிக்கப்பட்டிருப்பார்களானால் அதற்கு நாம் முழுப் பொறுப்பு. ஆனால் அப்படி எவருமே வரியினால் பாதிக்கப்படவில்லை.

ஒவ்வொருவரும் இன்றைய அரசியல் சூழ்நிலைகளை விளங்கிக் கொள்ளவேண்டும். இச்சூழலிலிருந்து எவருமே ஒதுங்கிவிடமுடியாது. அவ்வாறு ஒதுங்கினால் அவர்கள் மனிதர்கள் அல்லர். வாழத் தெரிந்தவர்கள அல்லர்.

நாம் எந்நேரமும் சாகத் தயாராகவுள்ள புலிகள். நீங்கள் ஒவ்வொருவரும் வாழத்துடிக்கும் புலிகள்.

மக்கள் யுத்தமின்றி சமாதானமாக வாழவேண்டும் என்பதே எமது அவாவாகும். அது அரசின் கைகளிலே தான் தங்கியுள்ளது. சிறிலங்கா அரசு போராட்டத்தை எம்மீது திணிக்குமாயின் நாம் மக்களின் விடிவிற்காக போராட வேண்டியது தவிர்க்கமுடியாததாகும். எனவே நாம் தொடர்ந்து பலமாக இருக்கவேண்டியது அவசியமாகும்.

நாம் சமூக, பொருளாதார ரீதியாக பலமாக இருப்பதற்கு கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகிய உங்களின் பங்களிப்பு அவசியம்' என்றார். (ஒ-ரி)

## சாவகச்சேரியில் நடமாடும் சேவை

தென்மராட்சி,ஜூலை29

மக்கள் வங்கியின் வட வலயத்தினரின் நடமாடும் சேவைகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பி.ப.2.30 மணிவரை சாவகச்சேரி மக்கள் வங்கியில் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி மக்கள் வங்கி தொடர்பான குறைகளை நேரில் கேட்டறிந்து முடியுமானவரை உடனடித் தீர்வைப் பெற்றுத் தருமுகமாக இந்தச் சேவை நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வங்கியின் வாடிக்கையாளர்களும் பொதுமக்களும் அன்றைய தினம் நேரில் குறைகளைத் தெரிவிக்கலாமெனவும் -

குறிப்பாக கடன்பெற்று ஒழுங்காகச் செலுத்தத் தவறியவர்கள் தங்கள் நிலைமையை நேரில் கூறி உரிய அறிவுரைகளைப் பெற்றுக்கொள்ளலாமெனவும் -

சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் க.பாலச்சந்திரன் தெரிவித்தார். (ஒ-10-117)

## சாரணர் சிரமதானம்

யாழ்ப்பாணம்,ஜூலை29

யாழ்.மத்திய கல்லூரி மற்றும் சென்ஜோன்ஸ் கல்லூரிகளைச் சேர்ந்த சாரணர் குழுவொன்று யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் சென்று சிரமதானப் பணி ஒன்றினை மேற்கொண்டது. அக்குழுவினர் வைத்தியசாலை சத்திர சிகிச்சைப் பிரிவுச் சுற்றாடலில் இருந்த புல், பூண்டுகளை வெட்டித் துப்புரவுப் பணியினை மேற்கொண்டனர். (ஒ-15)

## மரண அறிவித்தல்

### முருகேசு கந்தசாமி (மு.க.)

களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கந்தசாமி (மு.க.) நேற்று (28.07.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான புட்டுக்கட்டி தம்பிப்பிள்ளை - நாகம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், ரவிச்சந்திரன் (உரிமையாளர், M.K. லொறி), பாலசந்திரன் (சவூதி அரேபியா), கமலச்சந்திரன் (உரிமையாளர், M.K. கடை), இராமச்சந்திரன (மாணவன்), ஐங்கரன் (M.K. ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவகாமசுந்தரியின் அன்பு மாமனாரும் ராகவனின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (30.07.2002) செவ்வாய்க்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதம்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*E.G. 08, சமகிபுர,*
*தொடர்மாடி,*
*கிராண்ட்பாஸ், கொழும்பு - 14.*
*T.P.: 335262.*

(6475)

தகவல்:
க.இராமச்சந்திரன்
(மகன்)

## சேவைபெறலை பாராட்டி வாழ்த்துகின்றோம்



கமநல சேவைகள் திணைக்களத்தில்
36 வருடங்களாக அருஞ்சேவையாற்றிய
உயர்திரு. சாந்தலிங்கம் மகாதேவா
(தொழில்நுட்ப உத்தியோகத்தர்)
அவர்கள்

சென்ற 03.07.2002ஆம் திகதியிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார். இவர் 1967இல் நீர்ப்பாசன மேற்பார்வையாளராக சேவையில் சேர்ந்து படிப்படியாகப் பதவி உயர்வுகள் பெற்று தொழில்நுட்ப உத்தியோகத்தராகப் பணியாற்றினார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பணியாற்றிய காலத்தில் கரியாலை நாகபடுவான் குளம், வன்னேரிக்குளம், அம்பலப்பெருமாள் குளம், கோட்டைகட்டிய குளம் ஆகிய பெரிய நீர்ப்பாசனத்திட்ட வேலைகளில் திறம்படச் சேவையாற்றியதன் மூலம் மக்களின் விவசாயச் செய்கைக்கு அருஞ்சேவை ஆற்றியுள்ளார். மேலும் முல்லைத்தீவு, வவுனியா, யாழ்ப்பாண மாவட்டங்களிலுள்ள நீர்ப்பாசனக் குளங்களின் புனரமைப்பு வேலைகளையும், திணைக்கள வேலைத்திட்டங்களையும் திறம்படச்செய்து, மேலதிகாரிகளின் மனமார்ந்த பாராட்டுக்களையும், விவசாயிகளின் நன்மதிப்பையும் பெற்றவர்.

இவரது சேவைகளைப் பாராட்டுவதுடன் அவர் ஓய்வுபெற்றாலும், அவரது சமூக, சமயப் பணிகள் மேலும் தொடரவும் பல சிறப்புகள் பெற்று நீடுழி வாழவும் இறையருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

*கமநல சேவைகள் நிலையம்,*
*வேலணை.* (6476)

வேலணை பெரும்பாக உத்தியோகத்தரும்,
ஊழியர்களும், நிலையக்குழுத் தலைவரும், உறுப்பினர்களும்.

# இந்து மத பேருரைகள்

## அழைப்பு

யாழ்ப்பாணத்தில் தமிழகப் பேராசிரியர்களின்

**இந்துமதப் பேருரைகள்**

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில்

தமிழகப் பேராசிரியர்கள்

**கே.சேகர், ந.விஜயசுந்தரி** ஆகியோரின்

**"அர்த்தமுள்ள இந்துமதம்"**

சிறப்புச் சொற்பொழிவுகள்

இடம்: யாழ்ப்பாணம், நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றில்

காலம்: இன்று (29.07.2002) திங்கட்கிழமை மாலை 5.00 மணி

தலைமை: **மாணபுமிகு தி.மகேஸ்வரன் நா.உ.**

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்

ஆசியுரை: **சுவாமி ஆத்மகணானந்தாஜீ மகராஜ்**

அனைத்து இந்து சைவப் பெருமக்களும்

திரண்டு வருக! பயன் பெறுக!

க.பரமேஸ்வரன்,

செயலாளர்.

(C/23097)

# சின்னமடு மாதா தேவாலயம்

## அவசர கலந்துரையாடல்

ஊர்காவற்றுறை, புளியங்கூடல் சின்னமடு மாதா தேவாலயத்தில் 04.08.2002 இல் நற்கருணை விழாவும் 05.08.2002 காலை திருநாள் திருப்பலி நிகழ்வும் நடைபெறவுள்ளன.

மேற்படி திருவிழாக்களின்போது தேவாலய வளவுக்குள் தற்காலிகக் கடைகளை அமைக்க விரும்புவோருக்கான கலந்துரையாடல் 01.08.2002 வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் தேவாலயத்தில் நடைபெறும்.

அன்றைய தினம் கடைகளை அமைக்கவிரும்புவோர் அதற்குரிய அனுமதியை பங்குத்தந்தையிடம் பெற்றுக்கொள்ளலாம்.

*புளியங்கூடல்,*
*ஊர்காவற்றுறை.*

எரிக் ரொசான்
பங்குத் தந்தை

(6483) சின்னமடு மாதா தேவாலய பரிபாலகர்.


போறணை உட்பட பேக்கரிக்குரிய தளபாடங்கள் அனைத்தும்

**விற்பனைக்குண்டு**

நாவலர் வீதி, நாவாந்துறை 2ஆம் குறுக்குத்தெருவில் பேக்கரிக்குரிய சகல தளபாடங்களும் விற்பனைக்கு உண்டு. *அணுகவேண்டிய இடம்:* லீ.டிக்சன், நாவாந்துறை, யாழ்ப்பாணம். (6477)

**ராஜா** யாழ்ப்பாணம்.

31ஆம் திகதிவரை

அஜித், ஜோதிகா, வடிவேல் நடித்த

**ராஜா**

தினசரி 10.30, 2.30, 5.30

(C/22943)

**லஷ்சுமி** இணுவில்.

CAMERON dla2 - Lucxlla

**CHARLIES ANGELS**

கராட்டிச் சித்திரம் (சீஸ்கள்)

தினசரி 10.30, 2.30, 6.30 (ப.நே.)

(6479)

**நிறைஞ்சனாஸ்** சாங்கானை

சூர்யா, லைலா, ராஜ்கிரண் நடித்த

**நந்தா**

காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்)

(C/22944)

**நாகம்ஸ்** சுன்னாகம்

குணால், தருண், சினேகா, பீர்தா, தாமு நடித்த

**புன்னகைதேசம்**

(சீஸ்ஸ்)

காட்சிகள்: 11.00, 3.00 (பு.நே.)

(6448)


# முதலாம் ஆண்டு நினைவு

## அஞ்சலி

தாயின் மடியில் — தலைவன் நிழலில்

1976 - 06 - 21 — 2001 - 07 - 10



## அமரர் செல்வி மேனகா கணேசவேல்

**(ஆசிரியர் - யா/உடுவில் மான்ஸ் கல்லூரி)**

மனத்தை விட்டகலா மாண்புள்ளம் கொண்டவளே!
மண் அதனை விட்டேகி ஆண்டு ஒன்றும் ஆனதுவே!
மாறிடுமோ எம் துயரம்? ஆறாதம்மா ஒரு கணமும்!
பெற்றெடுத்து உன் பெயர் காத்துப் பேணி வளர்த்த உறவுகள்
வற்றாத சோகத்தில் வாடுதம்மா இம்மண்ணில்!
முற்றியது கடமையென ஐந்து கரத்தான் பாதம் அடைந்தனையோ?
பற்றாக அவன் தாள்பிடித்துப் பரமன் அவன் நிழலினை அடைந்திடம்மா!

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

*கந்தையா உபாத்தியாயர் வீதி.*
*கந்தரோடை, சுன்னாகம்.*

- குடும்பத்தினர்.

(C/23096)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் தம்பியையா முத்துத்தம்பி

(முன்னாள் TEA MAKER,
ஹக்குகஸ்தனை தேயிலைத் தோட்டம், இரத்தினபுரி)

இன்றும் எமது நெஞ்சங்களில் நிறைந்துள்ள அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

28.06.2002 அன்று இறைபதம் அடைந்த அன்புத் கந்தையான தம்பியையா முத்துத்தம்பி அவர்களின் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (29.07.2002) திங்கட்கிழமை அதிகாலை 4 மணி தொடக்கம் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இலகடி,*
*அல்வாய் கிழக்கு,*
*அல்வாய்.*

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

தகவல்: ச.விநாயகமூர்த்தி
(யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்)

(C/23099)

# மரண அறிவித்தல்கள்

## பண்டாரி வேலன்

கைதடி மேற்கைச் சேர்ந்த பண்டாரி வேலன் அவர்கள் நேற்று (28.07.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நாகம்மாவின் அன்புக் கணவரும் பூபாலசிங்கம் (ஜேர்மனி), விமலாதேவி, குணலட்சுமி (சுவிஸ்), தனபாலசிங்கம் (சுவிஸ்), கோபாலசிங்கம் (ஹொலண்ட்), அனுலா (ஹொலண்ட்), அனஸ்ரி (துங்கா - லண்டன்), காலஞ்சென்றவர்களான திருஞானசிங்கம், குணபாலசிங்கம் ஆகியோரின் பாசமிகு தந்தையும் பூ.தயா (ஜேர்மனி), இ.சந்திரன், யோகேந்திரன் (இந்தி - சுவிஸ்), த.பவானி (சுவிஸ்), க.கண்ணன் (லண்டன்), செ.பாஸ்கரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான ம.சின்னத்தம்பி, ப.மாதன், திருமதி கந்தையா லட்சுமி ஆகியோரதும் ப.செல்லத்துரையினதும் (அதிபர், கலைவாணி வித்தியாசாலை - கைதடி) மூத்த சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*நேவையூர்,*
*கைதடி மேற்கு.*

தகவல்:
ப.செல்லத்துரை (அதிபர் - சகோதரன்)

(6484)

## திருமதி நல்லம்மா தம்பிமுத்து

(ஓய்வுபெற்ற தாதி, யாழ். போதனா வைத்தியசாலை)

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா தம்பிமுத்து அவர்கள் நேற்று (28.07.2002) ஞாயிற்றுக்கிழமை இயற்கையெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிமுத்து (Rtd. Postmaster) அவர்களின் அன்பு மனைவியும் ஈஸ்பரமூர்த்தி (Sri Lanka Air Force), கிரிஜெயச்செல்வி (Swiss), கணேசமூர்த்தி (Lanka Cement Ltd., K.K.S.), காலஞ்சென்ற சத்தியமூர்த்தி (Sri Lanka Army) ஆகியோரின் அன்புத் தாயாரும் பெறாமக்களின் சிறிய தாயாரும் லோகசௌந்தரி, ஜெயலக்சுமி ஆகியோரின் மாமியாரும் சபரீதா, கனுசியா, சௌமிலா, சபரீதன், கஜதாரணி, ரகுலவரணி, யூதீஷ், நிதர்ஜன் ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் வர்ணாவின் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2002) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூவோடை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"கரிஸ்தான்"*
*மானிப்பாய் வீதி.*
*உடுவில், சுன்னாகம்.*

தகவல்:
த.ஈஸ்பரமூர்த்தி,
த.கணேசமூர்த்தி (மகன்மார்)

(6482)

## காசிநாதர் பாலசிங்கம்

காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகவும் வவுனியா, நெடுங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட காசிநாதர் பாலசிங்கம் அவர்கள் நேற்று (28.07.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கோமளவள்ளியின் அன்புக் கணவரும் சரவணபவான், சுந்தரசிவம், விமலாதேவி, தம்பிராசா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் நேசமணி, சுசிலாதேவி, ஞானசம்மந்தர் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2002) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பறளாய்,*
*சுழிபுரம்.*

தகவல்:
பா.சரவணபவான் (மகன்)

(6489)

## நந்தகுமாரசர்மா நந்தநிர்மலேஸ்வரசர்மா

அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நந்தகுமாரசர்மா நந்தநிர்மலேஸ்வரசர்மா அவர்கள் நேற்று (28.07.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நந்தகுமாரசர்மா - நிர்மலாதேவி அம்மா தம்பதிகளின் அன்பு மகனும் கணநாதகௌரிசங்கரசர்மா, க்ஜபரன், கஜலோஜனா ஆகியோரின் சகோதரனும் இராமச்சந்திரசர்மா, குகனேஸ்வரிஅம்மா, துரைச்சாமி, தில்லைஆச்சி ஆகியோரின் பேரனும் கமலக்கண்ணன் - ரஞ்சனாதேவி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2002) திங்கட்கிழமை ந.ப.12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக தம்மனை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தம்மனை மேற்கு,*
*அளவெட்டி.*

தகவல்:
து.நந்தன்ஐயா (தகப்பன்)

(6488)

## அருளானந்தம் மஸ்கிறிஞ்ஞ

அருளானந்தம் மஸ்கிறிஞ்ஞ அவர்கள் 27.07.2002 சனிக்கிழமை மன்னார் பேசாலையில் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் திருநெல்வேலி புனித சவேரியார் ஆலய பங்குத் தந்தை அருள்திரு. செலஸ்ரின் மஸ்கிறிஞ்ஞ(அ.ம.தி.) அவர்களின் தந்தையாராவார்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாறுதலுக்காக வேண்டுகிறோம்.

(C/23100) யாழ். மாகாண அமலமரித்தியாகிகள்.

# 5 ஆண்டுகளில் 94 சிசுக்கள் மரணம்

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் கடந்த ஐந்து ஆண்டுகளில் 94 சிசுக்கள் மரணமடைந்துள்ளதாக வைத்தியத்துறைப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

1997ஆம் ஆண்டு 24 சிசுக்களும், 1998ஆம் ஆண்டு 6 சிசுக்களும், 1999ஆம் ஆண்டில் 30 சிசுக்களும், 2000ஆம் ஆண்டில் 23 சிசுக்களும், 2001ஆம் ஆண்டு 11 சிசுக்களும் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 1997இல் 2 தாய்மாரும், 1999ஆம் ஆண்டு 6 தாய்மாரும், 2000ஆம் ஆண்டு 2 தாய்மாரும், 2001 இல் 2 தாய்மாருமாக மொத்தம் 12 தாய்மார்கள் மகப்பேற்றின் போதும் அதன்பின்னரும் மரணமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் நெருக்கடிகள் மிகுந்து மோசமான பொருளாதாரத் தடை நடவடிக்கைகள் நடைமுறையில் இருந்த யுத்தகாலத்திலேயே இந்த இழப்புகள் நேர்ந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

1996ஆம் ஆண்டு கிளிநொச்சி நகரப்பகுதியைக் கைப்பற்றுவதற்காக இராணுவத்தினர் மேற்கொண்ட 'சத்ஜய' தொடர் இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை அக்கராயன்குளத்தில் தற்காலிகக் கட்டடத்தில் 6 வருடங்களுக்கு மேலாக இயங்கி வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

யுத்தநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டு கிளிநொச்சி நகரப்பகுதியில் வாழ்க்கை துளிர்விடத் தொடங்கியுள்ளபோதிலும் பேரழிவுக்குள்ளாகிய கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை இன்னும் சரியான முறையில் சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பிரதேசத்தினுள் டெங்குநோய் குறித்து அங்குள்ள வைத்தியத்துறையினர் பொதுமக்களுக்குத் தீவிர எச்சரிக்கை செய்துவருகின்றனர். நாட்டில் பரவலாகக் காணப்படும் டெங்கு நோயினால் பெரும் எண்ணிக்கையானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதையடுத்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் டெங்கு நோய் விழிப்புணர்வு நடவடிக்கைகள், நோய்த் தடுப்புச் செயற்பாடுகள் என்பனவும் அதிகாரிகளால் அங்கு தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

வன்னிப்பகுதியிலும் டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட மலேரியா நோய்த் தடுப்பு இயக்கத்திற்குப் பொறுப்பான வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். இந்த நுளம்புகள் அதிகமாகக் காணப்படும் இடங்களில் தடுப்பு நடவடிக்கைகளைக் கடைப்பிடித்து தமது செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்குமாறு அவர் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## போலிப் புலி உறுப்பினர் வகையாகச் சிக்கினார்

செங்கலடி,ஜூலை29

கல்முனைப் பிரதேசத்தில் தன்னை புலி உறுப்பினர் என்று போலியாகக் கூறி பொதுமக்களிடம் வரி அறவிட்டதாகக் கூறப்படும் நபர் ஒருவர் பொதுமக்களிடம் வகையாகச் சிக்கிக் கொண்டார்.

பொதுமக்கள் சந்தேகநபரை மடக்கி, கல்முனையில் உள்ள புலிகள் அலுவலகத்தில் ஒப்படைத்தனர்.

வீரமுனைப் பகுதியில் இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.

தன்னைப் புலி உறுப்பினர் என்று கூறி இப்பிரதேச மக்களிடம் குடும்பம ஒன்றுக்கு ஐந்நூறு ரூபா என்ற வீதத்தில் அறவிட்டு வந்ததாகக் கூறப்படும் கதிரமலை வசந்தகுமார் (வயது 25) என்ற கரடியனாறுப் பகுதியைச் சேர்ந்த இளைஞரே பொதுமக்களிடம் வகையாகச் சிக்கிக்கொண்டார். (ஐ)

# கொடும்பாவி எரிப்பு

செங்கலடி,ஜூலை29

வந்தாறுமூலை, கொம்மாந்துறைப் பிரதேச மக்களினால் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் கொடும்பாவி நேற்றுக்காலை எரிக்கப்பட்டது.

கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் புடைசூழ கொடும்பாவி செருப்பு மாலை அணிவிக்கப்பட்டு ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது.

## செப்ரெம்பர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய அமைதிப் பேச்சுகளில் விடுதலைப் புலிகள் காட்டும் ஈடுபாட்டிற்கும் அரசியல் ரீதியான அந்த அமைப்பின் செயற்பாட்டுக்கும் சர்வதேச ரீதியில் கிடைத்துள்ள அங்கீகாரத்தை வெளிப்படுத்தும் வகையில் அன்ரன் பாலசிங்கத்தின் பயண ஒழுங்கு அமையும் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

புலிகள் விவகாரத்தில் சர்வதேச ரீதியில் மாறிவரும் ஒழுங்கு மாற்றத்தை அது அப்பட்டமாகப் பிரதிபலிக்கும் என்று நம்பப்படுகிறது.

அமெரிக்கா சென்றிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தான் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துப் பேசவும் தயாராக இருப்பதாக அங்குவைத்து பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

பிரதமரின் விருப்பத்தை அவர் அல்லது அவரது அரசு உத்தியோகபூர்வமாக இன்னும் விடுதலைப் புலிகளுக்குத் தெரிவிக்கவில்லை. ஆனால், இவ்வாறு உத்தியோகபூர்வத் தகவல தெரிவிக்கப்படுமானால் அதனைப் புலிகளின் தலைமைப்பீடம் சாதகமாகப் பரிசீலிக்கக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாகத் தெரிகின்றது.

ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் வன்னி திரும்பிய பின்னர், அவர் சகிதம் அங்கு பிரதமர் ரணிலை வரவேற்று உபசரிப்பதை புலிகளின் தலைவர் பிரபாகரன் மகிழ்வடைவார் என சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மூன்று சடலங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை நேற்றுக் கையளித்தனர்.

இறந்தவர்கள் மூவரும் கண்டியைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தமக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து தட்சணாமருதமடுப் பகுதியில் இந்தச் சடலங்களைத் தாங்கள் கண்டெடுத்து பிரேத பரிசோதனை நடத்தி மரணவிசாரணையின் பின்னர் வவுனியா பொலீஸாரிடம் ஒப்படைத்ததாகத் தெரிவித்துள்ளனர். இந்தச்சம்பவம் குறித்து மேல் விசாரணைகளைத் தொடருமாறும் விடுதலைப் புலிகளின் காவல்துறையினர் ஸ்ரீலங்காப் பொலீஸாரிடம் கேட்டுள்ளனர்.

கண்டி, குருநாகல் போன்ற இடங்களைச்சேர்ந்த 17 பேர் கொண்ட குழு ஒன்று கடந்த 24 ஆம் திகதி மடுக்கோயிலுக்கு சென்றதாகவும் அவர்களில் 12 பேர் மறுநாள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிவிட்டதாகவும் மிகுதி 5 பேரில் மூன்று பேர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளதாகவும் இரண்டுபேரையும் அவர்கள் பயணம் செய்த பஸ்வண்டியையும் காணவில்லையென்றும் ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

மூன்று சடலங்களையும் நேற்று வவுனியா வைத்தியசாலையில் சென்று பார்வையிட்ட வவுனியா மாவட்ட நீதிவான், இறந்தவர்கள் கண்டியைச் சேர்ந்தவர்கள் என்பதனால் பிரேதபரிசோதனை நடத்தி நீதிமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பேராதனைப் போதனா வைத்தியசாலை உடற்கூற்றியல் நிபுணருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்தக் கொலைகள் தொடர்பான மேல் விசாரணைகளைத் தொடர்வதற்கு வசதியாக வவுனியா அரச அதிபர் அல்லது போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு ஊடாக காவல் துறையினரிடமிருந்து இது தொடர்பான தடயங்களையும் சந்தேகநபர்கள் எவராவது இருந்தால் அவர்களையும் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வவுனியா பொலீஸாருக்கும் நீதிவான் உத்தரவிட்டார்.

வவுனியா பொலீஸாரும் விடுதலைப் புலிகளின் காவல்துறையினரும் இச்சம்பவம் தொடர்பாக தனித்தனியாக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ஐ-8)

## போர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறுவார். எமது தேசியத் தலைவர் அரசியல் செயற்பாடுகளை உலக நாடுகளைக் கவரும் வண்ணம் நடத்துகின்றார்.

எமது எதிரிகள் எம்மைப் பல வழிகளிலும் போருக்கு இழுத்து வருகின்றனர். ஆனால், எமது தலைவர் இதில் உறுதியாக இருக்கின்றார். அரசியல் துஷ்பிரயோகங்களை கல்விமான்கள் அனுமதிக்கக்கூடாது. எமது போராளிகள் சில தவறுகளை விடலாம். அதனை அவர்கள் திருத்தவேண்டும். இதில் மிக உன்னிப்பாக இருக்க வேண்டும்.

எமது இழப்புக்கள் வீண்போகக் கூடாது. சகல கல்விமான்களும் இதைப்பற்றிச் சிந்திக்கவேண்டும்.

-இவ்வாறு அவர் கூறினார்.

இந் நிகழ்வில் கலாசார உத்தியோகத்தர் க.தங்கேஸ்வரி, கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் மு.செ. மூக்கையா, வர்த்தகர் சங்கத் தலைவர் ராஜன் ஆசீர்வாதம் ஆகியோரும் உரையாற்றினார்கள். (ஐ-8)

## வலயங்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கம் கல்வியமைச்சரைக் கேட்டுக் கொண்டுள்ளது.

பதிலுக்கு கல்வியமைச்சர் புதிய வலயங்கள் அமைக்கப்படும்போது இவ்விடயங்களை கவனத்தில் கொள்வதாகக் குறிப்பிட்டார்.

இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சில வலயங்கள் தனிச் சிங்களமொழி மூல வலயங்களாகவும் சில தனித் தமிழ்மொழி மூல வலயங்களாகவும் சில இருமொழி மூல வலயங்களாகவும் அமைக்கப்படுமெனவும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

## பெரும்பான்மை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தல் உட்பட 38 திருத்தச்சட்ட வரைபுகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன. இவை தொடர்பாகக் கட்சித் தலைவர்களின் கூட்டத்திலும் ஆராயப்பட்டன. அதன் பின்னரே ஓகஸ்ட் மாதத்தில் தொடர்ச்சியாக நாடாளுமன்ற அமர்வுகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

விமல் வீரவன்ஸ, மஹிந்த ராஜபக்ஷ, தினேஷ் குணவர்த்தனா ஆகியோர் நாடாளுமன்ற அமர்வு தினங்கள் போதாது நீடிக்கப்பட வேண்டும் என்று முன்னர் கோரினர். இப்போது நடாளுமன்றத்தையே ஒத்திவைத்து விடவேண்டும் என்கின்றனர். இதற்கு இடங்கொடுக்க முடியாது. திட்டமிட்டபடி அமர்வுகள் நடக்கும்.

உலக நாடுகள் பலவும் பொருளாதாரத்தை மீளமைக்க உதவ முன்வந்துள்ளன.

அதற்காகத் தற்பொழுது நடைமுறையில் இருக்கும் சட்டங்கள் சிலவற்றைத் திருத்தியமைக்க வேண்டும்.

நாட்டின் அபிவிருத்தியையும் சமாதானத்தையும் சீர்குலைப்பதே இவர்களின் நோக்கம்.

இதற்கு அரசாங்கம் ஒருபோதும் இடம்கொடுக்காது.

- இவ்வாறு அவர் கூறினார்.(ஐ-8)


நாளை ஆரம்பமாகிறது!
சமாதானக் குரல்
மாபெரும் இன்னிசை நற்செய்திப் பெருவிழா
உங்களுடன்
அனுமதி இலவசம்

தந்தை S.J.பெர்க்மான்ஸ் அவர்கள்
துரையப்பா விளையாட்டரங்கில் மாலை 4 மணி
இயேசு கிறிஸ்துவினால் உங்களுக்கு
சமாதானமும், சந்தோசமும், விடுதலையும்
கொண்டுவரும் நிகழ்விற்கு யாவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.
தொடர்பு:
மனதுருக்கம் இலங்கை, 021-3286.
(6064)

ஈசன் கல்வி நிலையம்
CHEMISTRY
A/L 2004
PAPER CLASS
திரு.சிவத்திரன் (B.Sc.)
Mon. Wed.: 6.00 a.m.
ஆரம்பம்: 31.07.2002
(Wed.) 6.00 a.m. (6481)

தையல் வேலைக்கு ஆள் தேவை
எமது நிலையத்துக்குத் தையல் வேலையில் அனுபவமுள்ள பெண் பிள்ளைகள் தேவை.
தொடர்பு: றொசானி காமன்ஸ், 363/1, இராஜகாரியார் வீதி, மானிப்பாய்.
(6427)

யசோ மோட்டேர்ஸ்
163, 165 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
மீண்டும் எமது ஸ்தாபனத்துக்கு விற்பனைக்கு வந்துவிட்டன!
- SUZUKI FIERO
- TVS CHAMP
- TVS VICTOR
- BAJAJ BOXER
- HERO HONDA PASSION
- ASPER
- SPLENDOR
- MD 90, SUPER CUP C50, C90
மற்றும் ஹெல்மெட் வகைகள்
YASO MOTORS 163, 165, STANLEY ROAD, JAFFNA. T.P.:2544 (C/23098)

MOBILE NET MCS COMPUTER SERVICES
324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)
அரச, தனியார் நிறுவனங்களை
கணனிமயப்படுத்தல்
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர், தலைநகரில் நூற்றுக்கு மேற்பட்ட நிறுவனங்களை கணனிமயப்படுத்திய கணனி வல்லுநர்களுடன் இணைந்து அரச, தனியார் நிறுவனங்களை கணனிமயப்படுத்தும் விசேட திட்டமொன்றை முன்வைத்துள்ளனர். இத்திட்டத்தில் தங்கள்நிறுவனத்தையும் இணைத்துக் கொள்ள விரும்புவோர் 04-08-2002இற்கு முன்னர் நேரில் தொடர்பு கொள்ளவும்.


## மரண அறிவித்தல்

### விசுவலிங்கம் அப்பாத்துரை

இளவாலை, சித்திரமேழியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் அப்பாத்துரை அவர்கள் நேற்று (28.07.2002) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கம் - பைரவி தம்பதிகளின் அன்பு மகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் நகுலேஸ்வரன், ஈஸ்வரி, யோகச்சந்திரன், கணேஸ்வரன், ஜாமினி, காலஞ்சென்ற யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் குமுதினி, கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் மாமனாரும் சரணிஜா, றணஜன், அனோஜிஜா, டினூஜன், நவீனன், யசிந்தன், நிருயினி, அபிவர்மன் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற சிவகுரு மற்றும் தங்கம்மா, காலஞ்சென்ற நடராசா, சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரனும் இரத்தினசிங்கம் (சுன்னாகம்), யோகராசா (திருநெல்வேலி), ஜெயபாலன் (நீர்வேலி வடக்கு) ஆகியோரின் சித்தப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2002) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் கோண்டாவிலில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கருவாண மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நகுலன், ஜீவா, குமார்
(பிள்ளைகள்)
நகுலன் ஸ்ரோர்ஸ், டச்றோட், உடுவில்.

*கணபதி களஞ்சியம்,*
*பலாலி வீதி.*
*கோண்டாவில்.* (6486)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.07.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.